# சோதிடமலர்

# SOTHIDA MALAR




உள்ளே....

* உங்களுக்கு இம்மாதம் எப்படி?
* தமிழ் ஈழம் மலருமா?
* ஜன்ம லக்னம்
* வளரும் விண்ணியல்
* நிழல் நிஜமாகிறது

இன்னும் பல

துந்துபி ஆனி (15-6-82 — 15-7-82) ரூபா 3-00

உ

# சோதிடமலர்

மாத சஞ்சிகை

ஆசிரியர்: பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா (சமஸ்கிருத பண்டிதர்)

மலர் 5 | துந்துபி வூ ஆனி மீ (15-6-1982) | இதழ் 3

ஜடாடவீ கலஜ்ஜல ப்ரவாஹபாவிதஸ்தலே
கலே வலம்ப்ய லம்பிதாம், புஜங்கதுங்க மாலிகாம் |
டமட்டமட்டமன்னிநத வட்ட மர்வயம்
சகார சண்டதாண்டவம் தனோது நசிவ: சிவம் | |

[ஜடாபாரத்தினின்றும் கீழிறங்கும் கங்கை வெள்ளத்தால் தாக்கப்பட்டு தூய்மையான கழுத்தில் தொங்குகின்ற பாம்பு மாலையை அணிந்துகொண்டு டமட் டமட் டமட் என்னும் ஒலி வழங்கும் உடுக்கு வாத்தியத்துடன் பார்ப்பதற்கு பயங்கரமான ஆடலைச் செய்கின்ற பரமேஸ்வரன் எம்க்கெல்லாம் மங்களத்தைப் பரப்பட்டும்.]

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்
பனித்த சடையும் பவளம் போற்பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதேயிந்த மானிலத்தே

## இந்த இதழில் ......................

பக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1 | நாள் எப்படி | ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் | ... | 4 |
| 3 | ஆனி மாதக் கிரகநிலை | ... | 5 |
| 4 | கால ஹோரைகள் | ... | 6 |
| 5 | ஆனி மாத வானியற்காட்சி | ... | 7 |
| 6 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? | ... | 8 |
| 7 | தமிழ் ஈழம் மலருமா? | ... | 17 |
| 8 | சதாவதானி கதிரவேற்பிள்ளை | ... | 19 |
| 9 | ஜன்மலக்னம் | ... | 21 |
| 10 | பிறந்த திகதிப் பலன் | ... | 23 |
| 11 | வளரும் விண்ணியல் | ... | 24 |
| 12 | நிழல் நிஜமாகிறது | ... | 27 |
| 13 | ஆய்வு மன்றம் | ... | 29 |
| 14 | மட்டுநகர் சோதிடமகாநாடு | ... | 30 |
| 15 | சந்தேக நிவிர்த்தி | ... | 32 |
| 16 | வாசகர் எண்ணம் | ... | 34 |
| 17 | குறுக்கெழுத்துப் போட்டி | ... | 36 |

# நாள் எப்படி?

ஆனி 1 செவ். (15-6-82) அஷ்டமி பகல் 11-30 வ. பூரட்டாதி-மரணம் காலை 6-14 வரை, கரிநாள். அஷ்டமி-நவமி யாகையால் புதிய கருமங்களை விலக்குக.

ஆனி 2 புத. (16-6-82) நவமி பகல் 10-44 வரை, உத்தரட்டாதி - சித்தம் காலை 6-21 வரை அதன் மேல் ரேவதி பி. இ. 5-41 வரை, பகல் 10-44ன் மேல் சுபகருமங்கள் செய்யலாம்.

ஆனி 3 வியா. (17-6-82) தசமி காலை 9-11 வரை, அசுவினி பின்னிரவு 4-18 வரை அமிர்தசித்தம். ஸ்மார்த்த ஏகாதசி விரதம். விஷ்ணுவழிபாட்டால் பாபங்கள் நீங்கும். எல்லாச் சுபகருமங்களுக்கும் ஏற்றதினம்.

ஆனி 4 வெ. (18-6-82) ஏகாதசி காலை 6-55 வ. அதன் மேல் துவாதசி பின்னிரவு 4-01 வரை, பரணி இரவு 2–17 வரை, சித்தம். வைஷ்ணவ ஏகாதசி விரதம். மத்திமசுபதினம். புதிய கருமங்களை நீக்கவும்.

ஆனி 5 சனி (19-6-82) திரயோதசி இரவு 12-47வ. கார்த்திகை இரவு 11–52 வரை, அமிர்தசித்தம், கார்த்திகை விரதம், சனிப்பிரதோஷ விரதம். மாலை சிவதர்சனத்தால் பாபவிமோசனமும், முருகனை வழிபடுவதால் ஐஸ்வரியமும் உண்டாகும். புதிய கருமங்களை விலக்குக.

ஆனி 6 ஞா. (20-6-82) சதுர்த்தசி இரவு 9-10 வ. ரோகிணி - சித்தம், இரவு 9-06 வ. இரவு 9-10 வ. மரணயோகம், கரிநாள். சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று.

ஆனி 7 திங். (21-6-82) அமாவாசை மாலை 5-22வ. மிருகசீரிடம் மாலை 6-06 வரை. அமிர்தசித்தம். அமாவாசை விரதம். பிதிர்தர்ப்பணத்தால் சந்ததி விருத்தி உண்டாகும். ஸாயனப்படி இன்று தக்ஷிணாயன ஆரம்பம். சுபகருமங்களை விலக்குக.

ஆனி 8 செவ். (22-6-82) பிரதமை பகல் 1–37 வ. திருவாதிரை - மரணம் பிற்பகல் 3-14 வரை, சந்திரதரிசனம். பிற்பகல் 3-14 ன் மேல் தோட்டச் செய்கை, ஆயுதாப்பியாசம் முதலியன செய்ய நன்று.

ஆனி 9 புதன் (23-6-82) துவிதீயை பகல் 10-03 வ. புனர்பூசம் பகல் 12-32 வரை, சித்தம், வயற் செய்கை, நெல்விதைப்பு, வியாபாரம், புதுக் கணக்கு முதலிய சுபகருமங்கள் மேற்கொள்ள லாம்.

ஆனி 10 வியா. (24-6-82) திரிதியை காலை 6-48வ. அதன்மேல் சதுர்த்தி பி. இ. 4-11 வரை, பூசம் பகல் 10-10 வரை, அமிர்தசித்தம், சதுர்த்தி விரதம். விநாயகப்பெருமானுக்கு விசேட பூஜை வழிபாடு செய்வதனால் அஞ்ஞானம் நீங்கும். மத்திம சுபதினம், சுபகருமங்கள் செய்யவேண்டின் பகல் 10-10 க்குள் செய்க.

ஆனி 11 வெ. (25-5-82) பஞ்சமி இரவு 1-49 வ. ஆயிலியம் காலை 8-17 வரை, மரணம், யோகம் நன்றாக இல்லை. புதுகருமங்களை விலக்குக.

ஆனி 12 சனி (26-6-82) ஷஷ்டி இரவு 12-20 வ. மகம் காலை 7-02 வரை, அமிர்தசித்தம், ஷஷ்டி விரதம். அவசிய கருமங்களை காலை 7-02 க்கு முன் செய்க.

ஆனி 13 ஞா. (27-6-82) ஸப்தமி இரவு 11-34வ. பூரம் காலை 6-28 வரை சித்தாமிர்தம், இரவு ஆனி உத்தர அபிஷேகம் சுபகருமங்கட்கு ஏற்ற தினமன்று.

ஆனி 14 திங் (28-6-82) அஷ்டமி இரவு 11-32வ. உத்தரம் காலை 6-37 வரை சித்தம், உதயம் ஆனி உத்தரதரிசனம். உதயத்தின் முன் நடேசப் பெருமானுக்கு அபிஷேகம் முடித்து உதயத்தில் அவரைத் தரிசித்தால் பிறவிப்பயனை அடையலாம். சுபகருமங்களை விலக்குக.

ஆனி 15 செவ். (29-6-82) நவமி பி. இ. 12-12 வ. அத்தம் காலை 7-31 வரை, சித்தம், அன்றாட பணிகளை மட்டும் தொடரவும்.

ஆனி 16 புதன் (30-6-82) தசமி இரவு 1–30 வ. சித்திரை காலை 9-04 வரை, சித்தம். பொதுவாக எல்லாச் சுபகருமங்களும் மேற்கொள்ள நன்று.

ஆனி 17 வியா (1-7-82) ஏகாதசி - சித்தம் பி. இ. 3-19 வரை, சுவாதி பகல் 11-12 வரை ஸர்வ ஏகாதசி விரதம் விஷ்ணு வழிபாட்டால் பாபங்கள் நீங்கும். எல்லாச் சுபகருமங்களையும் மேற்கொள்ள நன்று.

ஆனி 18 வெ. (2-7-82) துவாதசி பி. இ. 5-31 வ. விசாகம் பகல் 1-47 வரை, சித்தம், பகல் 1-47-ன் மேல் புது முயற்சிகளைச் செய்க.

ஆனி 19 சனி (3-7-82) திரயோதசி முழுவதும் அனுஷம் மாலை 4-41 வரை, சித்தம், சனிப் பிர தோஷவிரதம். மாலை சிவதரிசனத்தால் பாபங் கள் நீங்கும். புதுமுயற்சிகளை மாலை 4-41 இன் மேல் செய்க.

ஆனி 20 ஞா. (4-7-82) திரயோதசி காலை 7-58வ. கேட்டை - மரணம் இரவு 7-45 வரை, சுப கரு மங்களுக்கேற்ற தினமன்று.

ஆனி 21 திங். (5-7-82) சதுர்த்தசி பகல் 10-30வ. மூலம் - சித்தம் இரவு 10-52 வரை, பூரணை விர தம். அன்றுட பணிகளுடன் பிதுர்வழிபாட்டைச் செய்க.

ஆனி 22 செவ். (6-7-82) பூரணை பகல் 1-00 வரை, பூராடம் - சித்தம் இரவு 1-56 வரை, புதிய முயற் சிகளை விலக்குக.

ஆனி 23 புதன் (7-7-82) பிரதமை பகல் 3-26 வ. உத்தராடம் பி. இ. 4-48 வரை, அமிர்தசித்தம், பொதுச் சுபதினம், வியாபாரம், விவாக சம்பந் தமான சுப கருமங்கட்கும் நன்று.

ஆனி 24 வியா. (8-7-82) துவிதியை மாலை 5-36வ. திருவோணம் முழுவதும், சித்தம், . பொதுவாக எல்லாக் கருமங்களையும் மேற்கொள்ளலாம்.

ஆனி 25 வெ. (9-7-82) திரிதியை - மரணம் மாலை 7-26 வரை, திருவோணம் காலை 7-24 வரை, அவசிய கருமங்களை இரவு 7-26 இன் மேல் மேற் கொள்க.

ஆனி 26 சனி (10-7-82) சதுர்த்தி இரவு 8-50 வ. அவிட்டம் காலை 9-38 வரை, சித்தாமிர்தம், சங் கடசதுர்த்தி. மத்திம சுபதினம்.

ஆனி 27 ஞா. (11-7-82) பஞ்சமி இரவு 9-43 வரை, சதயம் பகல் 11-25 வரை சித்தம், மத்திம சுப தினம்.

ஆனி 28 திங். (12-7-82) ஷஷ்டி இரவு 10 01 வரை, பூரட்டாதி பகல் 12-37 வரை, மரணம், அசுப தினம்.

ஆனி 29 செவ். (13-7-82) ஸப்தமி இரவு 9-42வ. உத்தரட்டாதி பகல் 1-15 வரை, அமிர்தம். பூமி சம்பந்தமான தொழில்கள், ஆயுதாப்பியா சம் முதலியவற்றை இரவு 9-42க்கு முன் செய்ய லாம்.

ஆனி 30 புதன் (14-7-82) அஷ்டமி இரவு 8-42வ. ரேவதி பகல் 1-14 வரை, மரணம். அசுபதினம்.

ஆனி 31 வியா (15-7-82) நவமி மாலை 7-05 வரை, அசுவினி பகல் 12-35 வரை, அமிர்தசித்தம், சுப கருமங்கட்கேற்ற தினமன்று.

# ஆனி உத்தரம்

இம்மாத முக்கிய விசேஷம் ஆனி உத்தரமா கும். நடராஜப் பெருமானுக்கு ஒரு வருடத்தில் ஆறு அபிஷேகங்கள் நடைபெற வேண்டுமெனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவையாவன:- சித்திரை-திருவோணம், ஆனி-உத்தரம், ஆவணி சுக்ல சதுர்த்தசி, புரட்டாதி - சுக்ல சதுர்த்தசி, மார்கழி-திருவாதிரை, மாசி-சுக்ல சதுர்த்தசி என் பனவாம். இவற்றுள் ஆனி உத்தரமும், மார் கழி திருவாதிரையும் மிகவும் விசேடமானவை. இவ்விரு தினங்களில் மட்டும் இரவு அபிஷேகமும் உதயத்தில் தரிசனமும் நடைபெறுகின்றன.

சிவபெருமான் மெய்ஞ்ஞானப் பேரொளி வடிவ மாகத் தோன்றி முயலகனின் முதுகில் வலது திரு வடியை ஊன்றி, இடது திருவடியைத் தூக்கி, பத்துத் திருக்கரங்களில் வலது பாகத்தில் சூலம், உடுக்கை, அம்பு, வாள், மழு என்பனவும், இடப் பாகத்தில் பாம்பு, அக்கினி, வில், கேடகம், என்பனவுந் தாங்கி, திருநீல கண்டத்துடன், சங்க குண்டலம் பூண்டு, செஞ்சடையுடைய சிவந்த மேனியில் திருநீறு பூசி, சிவகணங்கள் மொந்தை, தண்ணுமை முழக்க, திருநந்தி தேவர் மத்தளம் கொட்ட, திருமால் இடக்கை இசைக்க கலைமகள் சுருதி கூட்ட, தும்புரு, நாரதர் பாட் டுப் பாட, நான்முகன் யாழ் தடவி சாமகீதம் இசைக்க, தேவர்கள் மலர்மாரி பொழிய, உமா தேவியார் ஒதுங்கி நிற்க இறைவன் திருநடனம் ஆடிய காட்சியையே யாம் இத்தினத்தில் தரிசிக் கின்றோம்.

28-6-82 திங்கட்கிழமை உதயத்தின்போது நடராஜப் பெருமானுடைய தாண்டவ கோலத் தைத் தரிசித்து பிறவிப் பயனை அடைவோமாக.

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)


### துந்துபி ௵ ஆனி ᵐ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (15-6-82 முதல் 15-7-82 வரை)

| இங் | தமி | வாரம் | மிதுன | | கடகம் | சிங்கம் | கன்னி | துலாம் | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் | இடபம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜூன் | ஆனி | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) |
| 15 | 1 | செவ் | 5 52 | 8 04 | 10 12 | 12 13 | 2 11 | 4 15 | 6 26 | 8 34 | 10 30 | 12 15 | 1 57 | 3 47 | 5 49 |
| 16 | 2 | புதன் | 5 50 | 8 00 | 10 08 | 12 09 | 2 07 | 4 11 | 6 22 | 8 30 | 10 26 | 12 11 | 1 53 | 3 43 | 5 45 |
| 17 | 3 | வியா | 5 46 | 7 57 | 10 05 | 12 06 | 2 04 | 4 08 | 6 19 | 8 27 | 10 23 | 12 08 | 1 50 | 3 40 | 5 42 |
| 18 | 4 | வெள் | 5 43 | 7 53 | 10 01 | 12 02 | 2 00 | 4 04 | 6 15 | 8 23 | 10 19 | 12 04 | 1 46 | 3 36 | 5 38 |
| 19 | 5 | சனி | 5 39 | 7 49 | 9 57 | 11 58 | 1 56 | 4 00 | 6 11 | 8 19 | 10 15 | 12 00 | 1 42 | 3 32 | 5 34 |
| 20 | 6 | ஞாயி | 5 35 | 7 45 | 9 53 | 11 54 | 1 52 | 3 56 | 6 07 | 8 15 | 10 11 | 11 56 | 1 38 | 3 28 | 5 30 |
| 21 | 7 | திங் | 5 31 | 7 40 | 9 48 | 11 49 | 1 47 | 3 51 | 6 02 | 8 10 | 10 06 | 11 51 | 1 33 | 3 23 | 5 25 |
| 22 | 8 | செவ் | 5 26 | 7 36 | 9 44 | 11 45 | 1 43 | 3 47 | 5 58 | 8 06 | 10 02 | 11 47 | 1 29 | 3 19 | 5 21 |
| 23 | 9 | புதன் | 5 22 | 7 33 | 9 41 | 11 42 | 1 40 | 3 44 | 5 55 | 8 03 | 9 59 | 11 44 | 1 26 | 3 16 | 5 18 |
| 24 | 10 | வியா | 5 19 | 7 29 | 9 37 | 11 38 | 1 36 | 3 40 | 5 51 | 7 59 | 9 55 | 11 40 | 1 22 | 3 12 | 5 14 |
| 25 | 11 | வெள் | 5 15 | 7 25 | 9 33 | 11 34 | 1 32 | 3 36 | 5 47 | 7 55 | 9 51 | 11 36 | 1 18 | 3 08 | 5 10 |
| 26 | 12 | சனி | 5 11 | 7 22 | 9 30 | 11 31 | 1 29 | 3 33 | 5 44 | 7 52 | 9 48 | 11 33 | 1 15 | 3 05 | 5 07 |
| 27 | 13 | ஞாயி | 5 08 | 7 17 | 9 25 | 11 26 | 1 24 | 3 28 | 5 39 | 7 47 | 9 43 | 11 28 | 1 10 | 3 00 | 5 02 |
| 28 | 14 | திங் | 5 03 | 7 13 | 9 21 | 11 22 | 1 20 | 3 24 | 5 35 | 7 43 | 9 39 | 11 24 | 1 06 | 2 56 | 4 58 |
| 29 | 15 | செவ் | 4 59 | 7 09 | 9 17 | 11 18 | 1 16 | 3 20 | 5 31 | 7 39 | 9 35 | 11 20 | 1 02 | 2 52 | 4 54 |
| 30 | 16 | புதன் | 4 54 | 7 05 | 9 13 | 11 14 | 1 12 | 3 16 | 5 27 | 7 35 | 9 31 | 11 16 | 12 58 | 2 48 | 4 50 |
| ஜூலை 1 | 17 | வியா | 4 51 | 7 01 | 9 09 | 11 10 | 1 08 | 3 12 | 5 23 | 7 31 | 9 27 | 11 12 | 12 54 | 2 44 | 4 46 |
| 2 | 18 | வெள் | 4 46 | 6 57 | 9 05 | 11 06 | 1 04 | 3 08 | 5 19 | 7 27 | 9 23 | 11 08 | 12 50 | 2 40 | 4 42 |
| 3 | 19 | சனி | 4 42 | 6 53 | 9 01 | 11 02 | 1 00 | 3 04 | 5 15 | 7 23 | 9 19 | 11 04 | 12 46 | 2 36 | 4 38 |
| 4 | 20 | ஞாயி | 4 39 | 6 49 | 8 57 | 10 58 | 12 56 | 3 00 | 5 11 | 7 19 | 9 15 | 11 00 | 12 42 | 2 32 | 4 34 |
| 5 | 21 | திங் | 4 35 | 6 46 | 8 54 | 10 55 | 12 53 | 2 57 | 5 08 | 7 16 | 9 12 | 10 57 | 12 39 | 2 29 | 4 31 |
| 6 | 22 | செவ் | 4 32 | 6 42 | 8 50 | 10 51 | 12 49 | 2 53 | 5 04 | 7 12 | 9 08 | 10 53 | 12 35 | 2 25 | 4 27 |
| 7 | 23 | புதன் | 4 28 | 6 38 | 8 46 | 10 47 | 12 45 | 2 49 | 5 00 | 7 08 | 9 04 | 10 49 | 12 31 | 2 21 | 4 23 |
| 8 | 24 | விாய | 4 24 | 6 34 | 8 42 | 10 43 | 12 41 | 2 45 | 4 56 | 7 04 | 9 00 | 10 45 | 12 27 | 2 17 | 4 19 |
| 9 | 25 | வெள் | 4 20 | 6 30 | 8 38 | 10 39 | 12 37 | 2 41 | 4 52 | 7 00 | 8 56 | 10 41 | 12 23 | 2 13 | 4 15 |
| 10 | 26 | சனி | 4 16 | 6 26 | 8 34 | 10 35 | 12 33 | 2 37 | 4 48 | 6 56 | 8 52 | 10 37 | 12 19 | 2 09 | 4 11 |
| 11 | 27 | ஞாயி | 4 11 | 6 23 | 8 31 | 10 32 | 12 30 | 2 34 | 4 45 | 6 53 | 8 49 | 10 34 | 12 16 | 2 06 | 4 08 |
| 12 | 28 | திங் | 4 09 | 6 19 | 8 27 | 10 28 | 12 26 | 2 30 | 4 41 | 6 49 | 8 45 | 10 30 | 12 12 | 2 02 | 4 04 |
| 13 | 29 | செவ் | 4 04 | 6 14 | 8 22 | 10 23 | 12 21 | 2 25 | 4 36 | 6 44 | 8 40 | 10 25 | 12 07 | 1 57 | 3 59 |
| 14 | 30 | புத | 4 00 | 6 10 | 8 18 | 10 19 | 12 17 | 2 21 | 4 32 | 6 40 | 8 36 | 10 21 | 12 03 | 1 53 | 3 55 |
| 15 | 31 | வியா | 3 55 | 6 06 | 8 14 | 10 15 | 12 13 | 2 17 | 4 28 | **6 36** | **8 32** | 10 17 | 11 59 | 1 49 | 3 51 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: ஆனி 31வ (15-7-82) இரவு 8 மணிக்கு என்னலக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை அவதானிக்கவும். (6-36—8-32) மகர லக்னம்.

# ஆனி மாதக் கிரகநிலை




## கிரகமாற்றங்கள்

6உ (20-6-82)காலை 7-41க்கு இட-சுக்
21உ (5-7-82) மாலை 6-31க்கு மிது-புத
31உ (15-7-82) பகல் 1-59க்கு மிது-சுக்
1உ புதன் வக்ரத்தியாகம்
30உ புதன் அஸ்தமனம்.
15உ குரு வக்ரத்தியாகம்
5உ சனி வக்ரத்தியாகம்
யுரேனஸ், நெப்டியூன் வக்கிரத்திலேயே சஞ்சரிக்கின்றூர்கள்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆனி 2உ | (16-6-82) | பி.இ. | 5-41 | முதல் | மேடம் |
| 5உ | (19-6-82) | காலை | 7-44 | ,, | இடபம் |
| 7உ | (21-6-82) | காலை | 7-37 | ,, | மிதுனம் |
| 9உ | (23-6-82) | காலை | 7-10 | ,, | கடகம் |
| 11உ | (25-6-82) | காலை | 8-17 | ,, | சிங்கம் |
| 13உ | (27-6-82) | பகல் | 12-25 | ,, | கன்னி |
| 15உ | (29-6-82) | மாலை | 8-12 | ,, | துலாம் |
| 18உ | (2-7-82) | காலை | 7-06 | ,, | விருச்சிகம் |
| 20உ | (4-7-82) | மாலை | 7-45 | ,, | தனுசு |
| 23உ | (7-7-82) | காலை | 8-40 | ,, | மகரம் |
| 25உ | (9-7-82) | மாலை | 8-34 | ,, | கும்பம் |
| 28உ | (12-7-82) | காலை | 6-22 | ,, | மீனம் |
| 30உ | (14-7-82) | பகல் | 1-13 | ,, | மேடம் |

### கிரகநிலை குறிக்க:-

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஆனி 31உ இரவு 8-00 மணிக்கு மகர லக்னம் என அறிந்து கொண்ட பின் மகரம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

இம்மாதம் நாட்டில் பொருளாதாரச் சிறப்பு நன்ருக இருக்கும். வேலையில்லாப் பிரச்சனை மிகவும் வலுத்துக்கொண்டே இருக்கும். அரசியலில் புதுப் பிரச்சினைகள் உருவாக்கும். கல்வித் துறைகள் ஓரளவு சிறப்படையும். தொற்றுநோய் முதலியன காணும். சமயாசாரத் துறைகள் சிறப்பாக இயங்கும். விவசாயத் தொழில்களும் விருத்தி பெறும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (ஆனி மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 5மணி 53 நிமிஷம்)

| வாரம் | 5...53 6...53 | 6...53 7...53 | 7...53 8...53 | 8...53 9...53 | 9...53 10...53 | 10...53 11...53 | 11...53 12...53 | 12...53 1 . 53 | 1...53 2...53 | 2...53 3...53 | 3...53 4...53 | 4...53 5...53 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# ஆனி மாத வானியற் காட்சிகள்

# ASTRONOMICAL PHENOMENA

**15-6-82 — 15-7-82**

சூரியன்: 15-6-82 காலை மணி 6-10 ல் (நிரயன) மிதுன ராசிப் பிரவேசம்.

15-6-82 சூரிய உதயம் காலை 5-53
அஸ்தமனம் மாலை 6-24

4-7-82 முன்னிரவு பூமியிலிருந்து சூரியன் கூடிய தூரத்தில் apogee

15-7-82 சூரிய உதயம் காலை 6-00.
அஸ்தமனம் மாலை 6-31.

21-6-82 இரவு மணி 11-51 ல் கடகாயனமும் தக்ஷிணயன ஆரம்பமும்.

சந்திரன்: 15-6-82 அபர-அஷ்டமி பகல் 11-30
21-6-82 அமாவாசை மாலை 5-22
22-6-82 சந்திர தரிசனம்
28-6-82 பூர்வாஷ்டமி இரவு 11-32
6-7-82 பூரணை பகல் 1-00
14-7-82 அபர அஷ்டமி இரவு 8-42

## கிரகங்கள்

புதன்:- 15-6-82 ல் வக்ரகதி நீங்கி நேரிய கதியில் கீழ் வானத்தில் காலை வெள்ளியாகத் தோற்றிக்கொண்டிருக்கும் இக்கிரகம், சூரிய உதயத்தின் போது 16 பாகை உயரத்தில் கீழ் வானத்தில் காணப்படும். பின் சிறிது சிறிதாக அதன் உயரம் கூடி 27-6-82-ல் அதன் கூடிய உயரமாகிய 22 பாகை உயரத்தில் காணப்படும். அதன் பின்னர் அதன் உயரம் குறைந்து வரும். 14-7-82-ல் சூர்ய சாமீப்பியத்தால் அஸ்தமனமடையும். 5-7-82 ல் மிதுன ராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்:- மாசத் தொடக்கத்தில் காலை வெள்ளியாக உதயத்தின்போது 36 பாகை உயரத்தில் கீழ்வானத்தில் தோறும் இக்கிரகம் மாத முடிவில் 29பாகை உயரத்திற் காணப்படும். 20-6-82ல் இடபராசியிலும் 14-7-82ல் மிதுன ராசியிலும் பிரவேசிக்கிறது.

செவ்வாய்:- மாசத் தொடக்கத்தில் சூரியஸ்தமனத்தின் போது கீழ்வானத்தில் 76 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சியில் காணப்பட்டு, நள்ளிரவில் மேற்கே அஸ்தமிக்கும். இம்மாதம் முழுவதும் கன்னிராசியிலேயே சஞ்சரிக்கும்.

வியாழன்:- மாசத் தொடக்கத்தில் சூரியஸ்தமனத்தின்போது கீழ்வானத்தில் 52 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு கிழக்கே 8 பாகை சரிவில் காணப்படும். சில மாசங்களாக வக்கிரகதியிற் சஞ்சரித்த இக்கிரகம் 29-6-82ல் வக்ரத்தியாகமாகி நேரிய கதியிற் செல்லத் தொடங்கும். மாதம் முழுவதும் சுவாதி 1-ம் பாதத்திலேயே சஞ்சரிக்கிறது.

சனி:- மாதத் தொடக்கத்தில் செவ்வாய்க்கு 9 பாகை கிழக்கே காணப்பட்ட இக்கிரகம் 19-6-82ல் வக்கிரகதி நீங்கி நேரியகதியிற் செல்லத் தொடங்கும். செவ்வாயின் கூடியகதியினுல் இவ்விரு கிரகங்களுக்குமுள்ள இடைத்தூரம் நாளடைவில் குறைந்து வருதலை அவதானிக்கலாம். 7-7-82 ல் செவ்வாய் சனியைச் சந்தித்தலையும், அதற்குப் பிறகு செவ்வாய்க்கு மேற்கே சனி காணப்படுவதையும் அவதானிக்கலாம். இம்மாதம் முழுவதும் சனி அத்தம் 4-ம் பாதத்திலேயே சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்

28-6-82 இரவு 10 மணியளவில் சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 6பாகை. பின்னிரவு 5மணியளவில் சந்திரனுக்குத் தெற்கு சனி 3பாகை. சந்திராஸ்தமனத்தின் முன் கவனிக்கவும்.

30-6-82 முற்பகல் சந்திரனுக்குத் தெற்கு வியாழன் 4 பாகை. அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.

4-7-82 காலையில் சுக்கிரனுக்கு வடக்கு ரோகிணி 4பாகை. உதயம் முன்பார்க்கவும். இரவு 11 மணிக்கு சந்திரனுல் வருணன் (Neptune) மறைக்கப்படும். தூரதிருஷ்டியினுல் பார்க்க வேண்டியது.

6-7-82 பூரண சந்திர கிரகணம். பகல் 1 மணியளவில் நிகழ்வதால் எமக்குத் தோற்ருது.

7-7-82 நண்பகல் செவ்வாய்க்கு வடக்கு சனி. 2½ பாகை. அஸ்தமனத்தின் பின் அவதானிக்கவும்.




டாக்டர் பண்டிற் கே. என். நவரத்தினம் **A. F. A.**

**15-6-82 முதல் 15-7-82 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக் குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத் தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித் துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் பிறந்தோர்க்கு சூரியபகவான் லோகமூர்த்தியாக 3-ம் ராசியில் ஸ்தானபலத்துடன் சஞ்சரிக்கிறார். இதனால் தொடர்ந்து பல கஷ்ட, நஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். மறைமுக எதிர்ப்புகளால் வேதனையேற்படினும், காரியம் கைகூட வழியுண்டாகும். தேகாரோக்கியம் இடையிடையே பாதிப்படையும். மாதா, பிதா வழிகளால் நற்பலனுண்டாகும். பணச்செலவுகள் அதிகமாயினும், தனகாரகன் வியாழன் சமாளித்துக் கொள்வார். ஜன்மராசியில் சுக்கிரன் சஞ்சரிப்பதால் முகச்செல்வாக்கு அதிகரிக்கும். இனசன விரோதங்கள் மறைந்துவிடும்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் அதிபதி சுக்கிரன் தாம்பத்திய வாழ்க்கையில் உச்சகட்டத்தைக் கொடுத்து மகிழ்விப்பார். பணவிடயத்தில் சிக்கலேற்படினும் சாதுரியமாகச் சமாளித்துக் கொள்ளலாம். கலை, கல்வித்துறைகளில் நாட்டமேற்படலாகும்.

வியாபாரிகட்கு வியாபாரி புதன் மாத முற்பகுதியிலும், சுக்கிரன் மாதபிற்பகுதியிலும் வர்த்தகம் வளர்ச்சியடைய உதவுவர். புதிய முதலீடுகள் நன்மையளிக்கும். வெளிநாட்டு வியாபாரம் லாபத்தைத் தரும். கள்ளமார்க்கட் வியாபாரிகள் அவதானமுடன் நடக்கவேண்டும்.

உத்தியோகத்தர்கட்கு அரசியல் கிரகம் சூரியன் அந்தஸ்தைக் காப்பாற்றுவார். சக ஊழியர்

பிரச்சினைகள் சமாளிக்கப்பட்டுவிடும். நன்மாற்றங்கள், உத்தியோக உயர்வுகள் இம்மாதம் கிடைக்கவழியேற்படும்.

விவசாயிகளுக்கு சனி 6-ல் வக்கிர நிவிர்த்தியடைவதால் பயிர்ச்செய்கை சிறப்படையும். தாக்கமடைந்த பயிர்கள் சீர்பெறும். மனமகிழ்ச்சியுடன் கருமங்களைத் தொடர்வீர்கள்.


தொழிலாளர்களுக்கு தொழிலாளி சனி கடின உழைப்பைக் கொடுத்தாலும், ஊதியம் சிறப்படைய உதவுவார். கூட்டுறவாளர், பங்காளர்கள் அதிக நன்மையடையமாட்டார்கள். புதுத் தொழில் வாய்ப்புகள் வளர்ச்சியடையமாட்டாது.

மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சிக்கு சிறந்த மாதம். வித்தியாகாரகன் புதன் சகலதுறைகளிலும் கல்விவளர உதவுவார். வெளிநாட்டுக்கல்வி முன்னேற்றமடையும். விளையாட்டுத்துறைகளிலும் பிரமிக்கத்தக்க அளவு வெற்றி கிட்டும்.

பெண்களுக்கு ஆடம்பரம், கேளிக்கைகள் நிறைந்த மாதம். எதிர்பாலாரை உங்கள் வசமாக்க சுக்கிரன் உதவிபுரிவார். கணவன், புத்திரர் அனுசரணை கிடைக்கும். காதல் விவகாரங்கள் வளர்ச்சியடையும்.

அதிஷ்ட நாட்கள்: ஜூன் 27 பி. ப. 28, 29
ஜூலை 9 பி. ப. 10, 11.

துரதிஷ்ட நாட்கள்: ஜூன் 15, 16
ஜூலை 2, 3, 4 மு. ப.
12, 13, 14 மு. ப.




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம்கால்

இடபராசியினர்க்கு சூரியன் சுவர்ணமூர்த்தியாகப் பவனி வந்துகொண்டிருப்பதால் சகல காரியங்களிலும் 5-ல் சனி, செவ்வாய், சேர்க்கையால் ஏற்படும் தடைதாமதங்கள் விலகிவிடும். ஆரோக்கியம் சிறக்க 6-ல் வியாழன் அருள் புரிவார். பிரயாணங்கள் சிறுசிறு லாபத்தைத்தரும். பணக்கஷ்டம் ஓரளவுக்கு நிவிர்த்தியடையும். அரசியல் செல்வாக்கு அதிகரிக்க சூரியபகவான் வாக்குஸ்தானத்தில் உதவி புரிவதால் கருமங்கள் யாவும் எளிதில் அனுகூலமாகும். இனசனக் கொண்டாட்டங்கள் அதிகமாகும்.

குடும்பஸ்தர்கட்கு ஜன்மராசியில் 2, 5-ம் அதிபதி திக்பலம் பெறுவதால் எவ்வித குறையும் கூற இடமில்லை. நற்காரியங்கள் நடாத்த உகந்த காலம். கடன் தொல்லைகள் அதிக சிரமம் தராது.

வியாபாரிகட்கு செட்டிபுதன் திக்குப்பலமடைவதால் வியாபாரம் பிரமாதமாக நடைபெறும். கடன்வசதிகள் வெற்றியளிக்கும். முதலீடுகள் லாபகரமாக இருக்கும். கள்ளமார்க்கட் வியாபாரம் திடீர்கஷ்டங்களைக் கொடுக்கும்.

உத்தியோகத்தர்கட்கு அரசியல் லாபம் அதிகரிக்கும். உங்கள் கருமங்கள் அதிகாரிகளின் மதிப்பையும், செல்வாக்கையும் வளர்க்க உதவும். பதவியுயர்வு, பணஉதவி என்பன கிடைக்கச் சிறந்தமாதம்.

விவசாயிகட்கு நன்மைகள் அதிகமில்லை. இருப்பினும் சனி, செவ்வாய் சேர்க்கையில் தடைப்பட கருமங்கள் படிப்படியாய்ச் சீரடையும். பயிர்ச்செய்கை விருத்தியாக்க நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

தொழிலாளிகட்கு நீண்டகாலமாக முயற்சி செய்ய தொழில்வாய்ப்புகள் கைக்கு வந்துசேரும். ஆரோக்கியம் சிறப்படையும். கூட்டுறவுத் தொழில் ஏற்பட்ட பிளவுகள் மெல்ல மெல்ல நிவிர்த்தியடையும். ஊதியம் உங்கள் தேவைகளைச் சமாளித்துக்கொள்ள வழியுண்டாகும்.

மாணவர்கட்கு ஞாபகசக்தி வளர்ச்சியடைய புதன் உதவியளிப்பார். கல்வியில் அதிக சிரத்தையேற்படலாகும். பரீட்சைகளில் சித்திகிட்டும். கலை, வியாபாரத்துறைகளில் நாட்டமேற்படாது.

பெண்கட்கு கணவனின் முன்னேற்றத்தால் அந்தஸ்து உயர வழியுண்டாகும். பணவருவாயும் கூடும். கன்னியர்கள் காதல்லீலைகளில் திருப்தி காண்பர். மூத்தோர் உதவிகள் கிடைக்கும்.

அதிஷ்ட நாட்கள்: ஜூலை 15, 16, 30
ஜூலை 1, 12, 13, 14 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: ஜூன் 17, 18
ஜூலை4பி.ப.5.6,14பி.ப,15.



## மிதுனம்

மிருகசிரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

மிதுனராசியில் ஜனனமானவர்களுக்கு சூரிய பகவான் ஜன்மராசியில் தாம்ரமூர்த்தியாக பலம் குன்றியிருப்பதால், கடந்த மாதத்தைப் போன்று கஷ்டங்களுண்டாகும். அலைச்சலுள்ள பிரயாணங்களும், வீண்செலவினங்களும் ஏற்படலாகும். சூழ்நிலையில் அமைதி நிலவ சனி, செவ்வாய் சேர்க்கை இடம்கொடாது. வயிறு சம்பந்தமான ரோகங்கள் உண்டாகி கஷ்டம்தரும். உறவினர் சேர்க்கையால் பொருள் நஷ்டம், பண நஷ்டம் உருவாகலாம். 5-ல் வியாழன் சஞ்சரித்தாலும் எவ்வித உதவியும் கிட்டாது. பணவருவாயில் தடங்கல் உண்டாகும்,

குடும்பஸ்தர்கட்கு புத்திரகாரகன் குரு 5-ல் சஞ்சரித்தாலும் புத்திரலாபம் ஏற்படாது. குடும்ப அமைதி சீர்குலையும். அடிதடி சண்டைகளுக்கும் குறைவிருக்காது. தற்காலிக பிரிவினைகள் உண்டாகலாம்.

வியாபாரிகளுக்கு வியாபார தந்திரங்கள் லாபத்தைத் தராது. தொடர்ந்து வியாபாரம் மந்தநிலையில் இருக்கும். பங்கு வியாபாரிகள் வீண்வம்புகளால் நட்டமடைவர். வங்கியில் பணப்புழக்கம் சிறப்பாக இராது. கள்ளச்சந்தை வியாபாரிகள் அரசாங்கத்தில் மாட்டிக்கொள்ள நேரிடும்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் மூர்த்தி பலமற்று ஜன்மராசியில் இருப்பதால் ஏராளமான நஷ்டங்கள் உங்களை தேடிவரும். தீய மாற்றங்கள், மனக்கசப்புகள் முதலியவற்றிற்கும் குறைவில்லை. அமைதியைத்தேடி அலைந்து திரிய நேரிடும்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி 4-ல் சொல்ல முடியாத கஷ்டங்களை ஏற்படுத்துவார். எல்லைத் தகராறுகள் பணச்செலவை அதிகரிக்கும். பயிர் அழிவுகள் உண்டாகும். அயலவர்கள் வீண்வம்புக்கு வருவர்.

தொழிலாளர்களுக்கும் நன்றல்ல. தொழில் செய்ய மனம் வராது. தொழில்வாய்ப்புகள் கைநழுவிப்போகும். நிலைப்பிரிவும் ஏற்படலாகும். ஊதியப் பற்றுக்குறையால் கடனாளியாக நேரிடும்.

மாணவர்களுக்கு மாதமுற்பகுதி விளையாட்டு, கலைத்துறையிலும், பிற்பகுதி கல்வி வளர்ச்சிக்கும் உகந்தமாதம். வியாழன் 5-ல் சஞ்சரிப்பினும் அறிவுவளர்ச்சியில் திருப்திகாண முடியாது. கல்வித்துறையை உதாசீனம் செய்வதால் மாற்றம் செய்யவேண்டி நேரிடும்.

பெண்களுக்கு காதல் கிரகம் சுக்கிரன் 11-ல் சஞ்சரிப்பதால் காதலர்களின் சேர்க்கையும், பணலாபமும் ஏற்படலாகும். அடிக்கடி பிரிவினை, பூசல்கள் உருவாக சனி, செவ்வாய் வழிகோலுவர். விவாகப்பேச்சுக்கள் திருப்திதராது,

அதிஷ்ட நாட்கள்: ஜூன் 17, 18
ஜூலை 2, 3, 4 மு. ப. 14, 15.

துரதிஷ்ட நாட்கள்: ஜூன் 19, 20
ஜூலை 7, 8, 9 மு. ப.



## கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

கடகராசியினர்க்கு சூரியன் இரஜதமூர்த்தியாக 12-ம் இராசியில் சஞ்சரிப்பதால் கடந்தகால கஷ்டங்களுக்கு சிறு நிவிர்த்தி கிடைக்க வழியுண்டாகும். இருந்தாலும் பணக்கஷ்டங்கள் தொடர்ந்து கேள்விக்குறியாக இருக்கும். சகோதரர், அயலவர், உறவுகளால் சிறு நன்மைகள் ஏற்படும். சிறு பயணங்கள் மேற்கொள்ளச் சந்தர்ப்பங்கள் கிட்டும். வாக்கு, கௌரவம் பாதிப்படையாமல் பாதுகாக்கலாம். உடல் ரோகங்கள் உபாதைகளை உண்டாக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சூரியன் மூர்த்தி பலமடைந்திருப்பதால் இல்வாழ்க்கையில் ஒரு குறையும் ஏற்படாது. புத்திரலாபம் சிறு அளவில் உண்டாகும். கல்வி வளர்ச்சி புத்திரர்களுக்கு லாபம் தரும்.

வியாபாரிகளுக்கு வங்கிநிலை திருப்தியளிக்கும். வியாபாரம் விருத்தியடையும். முதலீடுகள் லாபம் தரும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் நன்மையளிக்கும். அழகுசாதன, அலங்காரப் பொருட்கள் விற்பனை சிறக்கும்.

உத்தியோகத்தர்கட்கு தொடர்ந்து அரசாங்கத்தில் செல்வாக்கு நிலைக்கும். தொழிலகத்தில் அமைதி நிலவும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்காவிடினும் கருமங்கள் சீராக இயங்க வழி கிட்டும்.

விவசாயிகட்கு விவசாயி சனி 3-ல் செவ்வாயுடன் இருப்பினும் நன்மைகளையே செய்வார். எல்லைத் தகராறுகள் தீர்வு காணும். பயிர்ச் செழிப்பு நன்றாகும். ஊக்கத்துடன் உழைக்கவும்.

தொழிலாளர்களுக்கு உற்சாகமும், ஊக்கமும் வேண்டும். தொழில் ரீதியாக புரட்சிகர முன்னேற்றமேற்படும். பொறுப்புகள் மெல்ல மெல்லக் குறையும். ஊதியம் நன்றாக அமையும்.

மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சிக்கு உகந்த மாதம். பரீட்சைகளில் சித்தி கிட்டும். கடின உழைப்பில் முன்னேறுவீர்கள். கலைத்துறையில் வெற்றியும், புகழும் காத்திருக்கும். வெளி நாட்டுக் கல்வியிலும் சித்தி உண்டாகும்.

பெண்கட்கு சகல விதத்திலும் சிறப்பைக் கொடுக்கும். களியாட்டங்களில காலத்தை வீணாக்க நேரிடும். புதுச்சோடிகள் சேர்வதற்கு உகந்த மாதம். விவாக முயற்சிகள் வெற்றியளிக்கும்.

அதிஷ்ட நாட்கள்: ஜுன் 19, 20, ஜுலை 4 பி. ப 5, 6.

துரதிஷ்ட நாட்கள்: ஜுன் 21, 22, ஜுலை 9 பி. ப 10, 11



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்க ராசியினர்க்கு சூரிய பகவான் 11-ம் இடத்தில் லோக மூர்த்தியாகச் சஞ்சரிப்பதால் ஏழரைச் சனியுடன் சேர்ந்து மேலும் பல கஷ்ட பலன்களை அனுபவிக்க நேரிடும். 2-ல் செவ்வாய் எதிர்பாராத பண நட்டங்களையும், செலவினங்களையும் கொடுத்துக்கொண்டே இருக்கும். பெற்றோர் வழியால் துன்பங்கள் ஏற்படும். வாக்கு, கௌரவம், என்பவற்றை நிலைநாட்டுவது கஷ்டம். எடுத்த கருமங்கள் தடைப்படும்; உறவினர், அயலவர்சேர்க்கையால் மகிழ்ச்சி பொங்கும். தேகாரோக்கியம் சிறப்படையும்.

குடும்பஸ்தர்களுக்கு 2-ம் அதிபன் புதன் 10-ல் சஞ்சரித்தாலும் அதிக லாபம் ஏற்படாது. வாக்கு வாதங்களால் திட்டமிட்ட கருமங்கள் தடைப்பட்டுப் போகும். புத்திரலாபம் மிகவும் குறைவாகவே தென்படுகிறது. பணக் கஷ்டம் அதிகரிக்கும்.

வியாபாரிகளுக்கு 2-ம் அதிபதி புதன் 10-ல் இருப்பது வியாபார வளர்ச்சிக்கு நன்றாக இருப்பினும் பிரமாதமாக எதுவும் கூற இடமில்லை. வங்கியில் பணப்புழக்கம் சரியாக அமையாது. கள்ள மார்க்கட் வியாபாரம் முன்னேற்றகரமாக அமையப் புதன் உதவுவார்.

உத்தியோகத்தர்கட்கு 11-ல் சூரியன் ஸ்தான பெலத்துடன் திகழ்வதால் அந்தஸ்து காக்கப்படும். நாவை அடக்கி நடந்தால் நன்மை பயக்கும். பதவியுயர்வு, பணவருவாய் முதலியவற்றில் எவ்வித முன்னேற்றமும் காண முடியாது.

விவசாயிகளுக்கு சொல்லொணாக் கஷ்டம் நிகழும். பயிர் நட்டம் முதலியன உண்டாகும். வாக்கு வாதங்கள் கலகங்களை உண்டாக்கும். புதுப் பயிர்கள் நாட்டினால் அழிவு தேடிவரும்.

தொழிலாளர்கட்கு மிகவும் கஷ்டமான காலம்; கடின உழைப்பை மேற்கொண்டாலும் ஊதியம் மிகவும் குறைவாகவே இருக்கும். முதலாளிமாருடன் மனக்கசப்புகள் ஏற்படும். கூட்டுறவாளர் ஒற்றுமையை நிலைநாட்டுவது கஷ்டம்.

மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி சனி, செவ்வாய் சேர்க்யையால் தடைப்படும். கலைத்துறையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வெற்றியளிக்காது. பரீட்சை முடிவுகள் சாதகமாக அமைவதில் கஷ்டமுண்டாகும். தூரதேசக் கல்வியில் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும்,

பெண்களுக்கு கணவனின் வளர்ச்சியே திருப்தியளிக்காது. கன்னிப் பெண்களின் எதிர்பார்ப்புக்கள் கானல்நீர் போலாகிவிடும். விவாகப் பேச்சுகளில் ஈடுபடாமல் இருப்பின் நன்மையுண்டாகும்.

அதிஷ்ட நாட்கள்: ஜுன் 21, 22, ஜுலை 7, 8, 9 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: ஜுன் 15, 16, 23, 24, ஜுலை 12, 13, 14 மு. ப.



## கன்னி

உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2-ம் கால்

இவ்விராசியினர்க்கு சூரியன் தாம்ர மூர்த்தியாக சஞ்சாரம் செய்வதால் கஷ்டமும், இன்பமும் கலந்து காணப்படும். தன ஸ்தானத்தில் வியாழபகவான் சஞ்சரித்தாலும் பணமுடை தொந்தரவு ஏற்படத்தான் செய்யும். மன அமைதியை செவ்வாயும், சனியும் கெடுத்துக் கொண்டேயிருக்கும். உறவினர் சேர்க்கையால் நன்மைகள் ஏற்பட மாட்டாது. சமூகத்தில் உங்கள் பெயரை நிலைநாட்டுவதில் கஷ்டமுண்டாகும். பிரயாணங்களால் லாபமேற்பட வழியில்லை. சூரியபகவான் திக்பலம் பெற்றிருப்பதால் சிறு சிறு நற்பலன்களை எதிர்நோக்கலாம்.

குடும்பஸ்தர்களுக்கு புத்திரகாரகன் வியாழன் 2-ம் இடத்தில் இருப்பதால் புத்திர முன்னேற்றம் திருப்தியளிக்கும். இல்லற வாழ்க்கையில் குழப்பங்களை ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாம். முற்கோபம் எல்லாக் காரியங்களையும் கெடுத்துவிடும்.

வியாபாரிகளுக்கு செட்டி புதன் 9-ம், 10-ம் இராசிகளிலும், வியாழ பகவான் 2-ம் இடத்திலும் சஞ்சரிப்பதால் வியாபாரம் மிகச் சிறப்பாக நடக்க இடமுண்டு. வங்கி நிலைபரம் மகிழ்ச்சி தரும். கள்ள மார்க்கட் வியாபாரம் பிரச்சினை கொடுத்தாலும் சமாளித்துக் கொள்ளலாம்.

உத்தியோகத்தர்களுக்கு கௌரவம், அந்தஸ்து பாதிப்படையாமல் 10-ல் சூரியபகவான் காப்பாற்றுவார். சக உத்தியோகத்தர்கள் வேலைப்பளுவை உங்கள் மேல் சுமத்துவர். கடின உழைப்பால் மேலதிகாரிகளின் அனுசரணை கிட்டும்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி பூமிகாரகன் செவ்வாயுடன் சேர்ந்திருப்பது கடின உழைப்பைத் தரும். நெற்றியில் வியர்வை சிந்த உழைப்பீர்கள். தகராறுகள் இழுபறியாகவே இருக்கும். தானியக் கொள்வனவுக்கு உகந்த காலமல்ல.

தொழிலாளர்களுக்கு உழைப்பில் நம்பிக்கையிராது. ஆரோக்கியம் தொடர்ந்து கடமை செய்ய விடாமல் பாதிக்கும். சொந்தத் தொழில் புரிவோர் மிகவும் கஷ்டம் காண்பர். பங்குத் தொழில் சீராக நடைபெற மாட்டாது.

மாணவர்களுக்கு கல்விக்குரிய குரு நற்சஞ்சாரம் செய்வதால் கல்வியில் குழப்பமேற்படாது. சுலைக்குரியவன் சொந்த ராசியில் சஞ்சரிப்பதால் பணவருவாயுடன் கூடிய புகழ் கிட்டும். தூர தேசக் கல்வி முயற்சிகள் நன்மையளிக்கும்.

பெண்களுக்கு மகிழ்ச்சி பொங்கும் மாதம். ஒன்றுபட்ட இதயங்களுக்கு ஒரு குறையுமில்லை. காதல் விவகாரங்களில் தடைகள் ஏற்படினும் முதியோர் உதவி கிட்டும். விவாக சம்பந்தமான நற்காரியங்கள் ஆரம்பிக்கலாம்.

அதிஷ்ட நாட்கள்: ஜூன் 23, 24, ஜூலை 9 பி.ப, 10, 11.

துரதிஷ்ட நாட்கள்: ஜூன் 17, 18, 25, 26, 27 மு. ப, ஜூலை 14 பி. ப, 15



## துலாம்

சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3-ம் கால்

துலாராசியிற் பிறந்தோர்க்கு சூரியன் 9-ம் இராசியில் சுவர்ண மூர்த்தியாக ராஜபவனி வருவதால் கஷ்டங்கள் யாவும் சூரியனை அகண்ட பனிபோல் விலகிவிடும். தடைப்பட்ட நற்காரியங்கள் கைகூடும். அரசியல் செல்வாக்கு அதிகரிக்கும். பிரயாணங்கள் அடிக்கடி ஏற்பட்டாலும் நன்மையளிப்பனவாக அமையும். ஆரோக்கியம் சீரடைந்து வரும். தனகாரகன் ஜன்மராசியில் பணக்கஷ்டங்களைத் தீர்த்து வைப்பார். பெற்றோர் வழியால் நற்கருமங்கள் நிகழ இடமுண்டு. உறவினர் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.

குடும்பஸ்தர்கட்கு செவ்வாய், சனி சேர்க்கை இவ்வாழ்க்கைக்கு சிறந்ததல்ல. மனைவி மக்களால் செலவீனங்கள் உண்டாகும். இல்லற சுகபோகங்களைக் கொடுக்கவிடாது செலவுகளைச் சமாளிக்க புத்திரகாரகன் வியாழன் உதவிகிட்டும்.

வியாபாரிகட்கு மாத முற்பகுதி சிறப்பாக அமையாவிட்டாலும் பிற்பகுதி நன்மையளிக்கும். கள்ளச்சந்தை வியாபாரம் லாபம்தரும். வங்கி நிலுவைக்குக் குறைவிருக்காது. அலங்காரப் பொருட்கள் வேகமாக விற்பனையாகும். இருப்பி

பினும் இரககிய எதிர்ப்புக்களால் கஷ்டமுண்டாகும்.

உத்தியோகத்தர்கட்கு மேலதிகாரிகளிடம் செல்வாக்கு வலுப்பெறும். நன்மாற்றங்கள், பதவி உயர்வுகள், தனப்பிராப்தி என்பன வியாழன், சூரியன் திரிகோண பார்வையில் சஞ்சரிப்பதால் உண்டாகும்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி நற்சஞ்சாரத்தில் இல்லாதபடியால் நன்மைகள் ஏற்பட வழியில்லை. இருப்பினும் காணித்தகராறுகள், பணமுடை என்பவற்றை ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாம். புதுப்பயிர்கள் நாட்ட உகந்தகாலமல்ல.

தொழிலாளர்கட்கு விரக்தி ஏற்படாது. சொந்தத் தொழில் அதிக லாபம் தராது. பங்குத் தொழிலாளர் ஊதியப் பற்றுக்குறைவால் வேதனையடைவர். கூட்டுறவாளரும் ஒற்றுமையை நிலைநாட்டப் பாடுபடுவார்கள். சகதொழிலாளரால் ஒத்துழைப்புக் கிட்டும்.

மாணவர்களுக்கு மாதமுற்பகுதியில் வளர்ச்சி குன்றினும் பிற்பகுதி வியாழனின் உதவியால் சீரடையும். தூரதேசக் கல்வியில் ஆரம்பகாலத்தில் நன்மைகளேற்பட வழியில்லை. நேர்முகப் பரீட்சைகள் தோல்வியையே தரும்.

பெண்களுக்கு காதல் கிரகம் சுக்கிரன் களியாட்டங்களில் நாட்டத்தை ஈடுபடுத்தி பணத்தையும், மானத்தையும் கெடுத்துவிடுவார். கணவனின் ஒத்துழைப்புடன் எதையும் சாதிக்கலாம்.

அதிஷ்ட நாட்கள்: ஜுன் 15,16,25,26,27மு.ப.
ஜுலை 12,13,14மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: ஜுன் 19,20,27,பி.ப.28,29



## விருச்சிகம்

**விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை**

இவ்விராசியில் ஜனனமானவர்கட்கு சூரியபகவான் 8-ம் இடத்தில் இரஜதமூர்த்தியாகச் சஞ்சரிப்பதால் நன்மை தீமை கலந்து அனுபவிப்பர். சனி, செவ்வாய் சேர்க்கை பலத்த நட்டங்களை பொருளாதார ரீதியில் ஏற்படுத்தும்; பிரயாணங்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காது. இனபந்துக்கள் தொல்லை கொடுப்பார்கள். கடன்பட்டே காலத்தைக் கழிக்க வேண்டும். ஆரோக்கியம் சிறுசிறு ரோகங்களைக் காட்டும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் வியாழன் மறைவுஸ்தானத்தில் இல்வாழ்க்கையில் வெறுப்பைக் கொடுப்பான். புத்திரரால் எவ்வித நன்மையும் ஏற்படாது; பணமுடையால் வேதனை உண்டாகும்

வியாபாரிகட்கு எவ்வித முதலீடுகளும் பலனளிக்காது. வியாபாரம் மந்தமாகவே இருக்கும். அரசியல் தொல்லைகள் ஒருவாறு சமாளிக்கப்பட்டுவிடும். வெளிநாட்டு வர்த்தகம் மிகவும் பாதிப்படையும். வங்கிநிலை கவலைக்கிடமாக இருக்கும்.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகள் முகத்தில் கரிபூசுவார்கள். கந்தோர் விவகாரங்கள் உச்சக் கட்டத்தை அடையும். சகஉத்தியோகத்தர்களால் தீமையே ஏற்படும்.

விவசாயிகளுக்கு விவசாயி சனி 11ல் விசேபலனையே கொடுப்பார். எல்லைத் தகராறுகள் வெற்றியடையும். பயிர்களை நோய்கள் தாக்கினும் சமாளித்துக் கொள்ளலாம். வருமதிகள் சண்டை சச்சரவுகளுடன் கைக்குக் கிடைக்கும்.

தொழிலாளர்கட்கு பரவாயில்லை. எதிரிகளை சாமர்த்தியத்தால் அடக்கிவிடலாம். சொந்தத் தொழில் கடின உழைப்பால் விருத்தியடையும். கூட்டுறவாளர், பங்காளர் சிறுசிறு பிரச்சினைகளை எதிர்நோக்கினும் ஈற்றில் சமாளித்துக் கொள்ளலாம்.

மாணவர்கட்கு வித்தியாகாரகன் 8-ம் இராசியில் சஞ்சரிப்பினும் மெய்வருந்தக்கூலி தரும். கலைத்துறை, விளையாட்டுத்துறை ஈடுபாடுகள் சுமாராக இருக்கும். ஞாபக சக்தி வளர்ச்சி குன்றும், நேர்முகப் பரீட்சைகள் திருப்தியளிக்காது.

பெண்களுக்கு கணவனின் அனுசரணைகிடைத்தாலும் கஷ்டங்களுக்குக் குறைவில்லை. விவாகப் பேச்சுக்களுக்கு உகந்த மாதமல்ல. கன்னிப்பெண்கள் கஷ்டப்பட்டுத் தங்கள் கண்ணியத்தைப் பாதுகாப்பர்.

அதிஷ்ட நாட்கள்: ஜுன் 17,18,27பி.ப, 28, 29
ஜுலை 14பி.ப,15

துரதிஷ்ட நாட்கள்: ஜுன் 21,22,30,ஜுலை 1



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுராசியில் ஜனனமானவர்களுக்கு லோக மூர்த்தியாக 7-ம் இடத்தில் சூரியன் வலம்வருவதால் நன்மைகள் ஏற்பட வழியிராது. 10 இல் செவ்வாய், சனி தொழிலகத்தில் அந்தஸ்தைப் பாதிக்கும், வருமானம் தடைப்படும். இனபந்துக்கள் உதவிக்கு வரமாட்டார்கள். பிரயாணங்களில் அலைச்சலே ஒழிய நன்மையேற்படாது. ஆரோக்கியம் பாதிக்கப்படாது. முன்முயற்சிகள் தடைப்படும். 11ல் ஜன்மாதிபதி வியாழன் சஞ்சரிப்பதால் ஒருவித கரைச்சலுமிராது. அந்நிய சகாயங்களால் கஷ்டங்களைச் சமாளிக்கலாம்.

குடும்பஸ்தர்களுக்கு சந்தோஷமேற்படாது. புத்திரகாரகன் 11ல் புத்திர லாபங்களை ஏற்படுத்த முனைந்தாலும் மற்றைய கிரகசாரங்கள் நன்மைசெய்ய விடமாட்டார். தாம்பத்திய வாழ்விலும் திருப்தியிராது. இல்லற வாழ்விலும் சந் சந்தோசமேற்படாது.

வியாபாரிகட்கு வங்கியாளன் வியாழன் 11ல் வங்கிநிலையைப் பாதுகாப்பாக இயக்கினாலும் விருத்தியிராது. முதலீடுகள் பயனளியாது. மார்க்கட்டில் நற்பெயர் மங்கிப் போகும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் குன்றிவிடும்.

உத்தியோகத்தர்களுக்கு நிலைமை சாதகமாக இல்லை. பழைய பாக்கிகள் கிடையாது. உத்தியோக உயர்வுகள் சாத்தியமில்லை. மேலதிகாரிகள் தண்டனை வழங்க முயற்சிப்பார்கள். வியாழன் உதவியுடன் நிலைமை கட்டுப்படுத்தப்படும்.

விவசாயிகளுக்கு சனி 10ல் சஞ்சரித்தாலும் எவ்வித நன்மையும் கிடையாது. சூரியன் பெலவீனமுற்றிருப்பதால் பயிர்ச்செழிப்புமிராது. அயல் காணித் தகராறுகள் தலைதூக்குவதால் அந்தஸ்து பாதிப்படையும்.

தொழிலாளர்களுக்கு நிலைப்பிரிவு, பங்காளிகளிடையே பிரச்சனை, கூட்டுறவாளர்கள் பிளவுபடுதல் என்பன சர்வசாதாரணமாக நடக்கும். ஊதியம் பற்றுக்குறைவாகக் கிடைக்கும். புதுத் தொழில்கள் ஆரம்பிப்பதில் கஷ்டமேற்படும்.

மாணவர்களுக்கு கவலைப்பட்டும் பலனில்லை. பரீட்சையில் சித்தி கிட்டாது. நேர்முகப் பரீட்சைகளில் தோற்றுவதை நிறுத்துவது நலம். சுக்கிர சஞ்சாரம் சிறப்பாக இல்லாதபடியால் கலை, விளையாட்டுத் துறைகளும் நன்மையளிக்காது.

பெண்களுக்கு குடும்பப் பெண்கள் நிலைமையை ஒருவாறு சமாளிக்கலாம். கன்னிப்பெண்களும், காதலிப்போரும் கஷ்டமடைவர். 11ல் வியாழன் சஞ்சரிப்பதாலும் நிலைமை சீர்திருந்த இடமில்லை.

அதிஷ்ட நாட்கள்: ஜுன் 19,20,30, ஜுலை 1

துரதிஷ்ட நாட்கள்: ஜுன் 23,24, ஜுலை 3,4 மு.ப.



## மகரம்

உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2-ம்கால்

மகரராசியினர்க்கு சூரியபகவான் தாம்ர மூர்த்தியாக 6-ம் ராசியில் சஞ்சாரம் செய்கின்றார். இதனால் பலவகையிலும் கஷ்டபலன்களையே எதிர்நோக்க நேரிடும். சுக்கிரன் 5-ம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் சுமுகநிலை தென்படும். செவ்வாய், சனி 9-ம் இராசியில் சஞ்சரிப்பதால் பிதுர்வர்க்கத்தாருடன் ஒற்றுமைக் குறைவு திருப்தியீனங்கள் தென்படும். 10-ம் இடத்தில் வியாழன் சஞ்சரிப்பதால் இடமாற்றம், தேகசுகக்குறைவு, என்பன தோன்றும். தேவையற்ற விடயங்களில் தலையிடாதிருத்தல் நன்று. அரசாங்கத்தொடர்புகளிலும் திருப்தியற்ற பலனையே தரும்.

குடும்பஸ்தர்களுக்கு 2-ம் அதிபதி சனி 9-இலும் வியாழன் 10-இலும் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் மிக சந்தோஷம் நிலவும். புத்திரர்களால் நற்செய்திகள் கிட்டும். நற்கருமங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு தென்படும்.

வியாபாரிகட்கு புதன், வியாழன் ஆகிய கிரகங்கள் பொருளாதாரத் துறையை விருத்தி செய்து திருப்திகரமான வருவாயைக் காட்டுகிறது. வங்கிநிலை சிறப்பாக இருக்கும். புதிய முதலீடுகள் நற்பலன்களைத் தரும்.

உத்தியோகத்தர்கட்கு தொழில் ஸ்தானங்களில் சக ஊழியர்களின் மறைமுக எதிர்ப்புக்கள் உண்டாகும். மேலதிகாரிகளின் வெறுப்புகளும் ஏற்பட இடமுண்டு. தேவையற்ற விடயங்களில் ஈடுபடாது சொந்தக் கருமத்தில் கவனம் செலுத்துவது நன்று.

விவசாயிகட்கு சனி திரிகோணத்தில் சஞ்சரிப்பது நன்றாயினும் சூரியனுக்குக் கெட்ட பார்வையில் இருப்பதால் விவசாயத் துறையில் எதிர்பார்த்த நன்மை கிட்டுவது கஷ்டம்: செலவினங்களுக்கும் குறைவிருக்காது.

தொழிலாளர்களுக்கு தொழிற் கருமங்கள் சற்றுக் கூடுதலாக இருப்பினும், ஊதியம் அதிகமாகக் கிட்டும். சக தொழிலாளர்கள் ஒத்துழைப்பு நல்குவர். கூட்டுறவுத் தொழில் செய்வோர் நன்மையடைவர்.

மாணவர்களுக்கு புதன், வியாழன் ஆகிய கிரகங்கள் சூரியனுக்கு நேர் பார்வையிலிருப்பதால் கல்வியில், ஊக்கமும், முயற்சியும் கிட்டும். கல்வியில் சாதகமான நிலை உருவாகும். விளையாட்டுத் துறைகளிலும் வெற்றி கிடைக்கும்.

பெண்களுக்கு 5-ம் இடத்தில் சுக்கிரன் சுக போகங்களைக் கொடுப்பார். வயது வந்த பெண்களுக்கு விவாக முயற்சிகளில் அனுகூலம் கிட்டும். ஆடை, ஆபரணங்கள் முதலியவற்றில் திருப்தியான பலன்கள் காணப்படும்.

அதிஷ்ட நாட்கள்; ஜூன் 19, 20, 27 பி. ப, 28,
29, ஜூலை 2, 3, 4.

துரதிஷ்ட நாட்கள்: ஜூன் 25 பி. ப, 26,
27 மு. ப, ஜூலை 5, 6.



## கும்பம்

**அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்**

இவர்கட்கு சூரியன் இரஜதமூர்த்தியாக 5-ம் இராசியில் சஞ்சரிப்பது நற்பலன்களுக்கு ஏதுவாயினும் 8-ம் இடத்தில் செவ்வாய், சனியின் சஞ்சாரம் சில சிக்கல்களையும் கொடுக்கும். வருமானம் ஓரளவிருப்பினும் செலவுகள் மிதமிஞ்சிக் காட்டும். எடுத்த கருமங்கள் தாமதமாகவே நிறைவேறும். திடீர் விபத்துக்கள், நட்டங்கள் ஏற்பட இடமுண்டு. எனினும் 9-ம் இராசியில் வியாழன் சஞ்சரிப்பதால் யாவும் ஈற்றில் நன்மையாக முடியும். எல்லாக்கருமங்களிலும் அவதானம் தேவை. வாகனுதிகள், பிரயாணம் முதலியன நன்மையாக அமையும். தேவையற்ற சிக்கல்களும் எதிர்நோக்கும்.

குடும்பஸ்தர்கட்கு வியாழன் 9-ல் சஞ்சரிப்பது சிறப்பான அம்சமாகும். மனைவி மக்களால் ஒத்துழைப்பும் சந்தோசமும் கிடைத்தாலும் 8ல் சஞ்சரிக்கும் செவ்வாய், சனியின் சஞ்சாரம் பொருளாதாரக் கஷ்டம், இனசனங்களின் பகைமை என்பனவற்றை ஏற்படுத்தும்.

வியாபாரிகட்கு புதன் 5லும் வியாழன் 9லும் சஞ்சரிப்பதால் எதிர்பாராத லாபங்கள் கிட்டும், வங்கிநிலை சிறப்பாக இருக்கும். புதிய முதலீடுகள் ஆரம்பிப்பது நன்றல்ல. கள்ள மார்க்கட் வியாபாரத்தில் கூடியளவு கவனம் வேண்டும்.

உத்தியோகத்தர்கட்கு அரசியல் கிரகம் திரிகோண ராசியில் சஞ்சரிப்பது சிறப்பைக் கொடுக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும், மேலதிகாரிகளின் பாராட்டுக்களும் கிடைக்கும். ஒருகருமத்தைச் செவ்வனே மேற்கொள்ள கிரகசாரங்கள் நன்மையாயுள்ளன.

தொழிலாளர்கட்கு முயற்சி கூடுதலாகவிருப்பினும் அதற்கேற்ப லாபம் உண்டு. கூட்டுறவுத் தொழில்களால் கஷ்டங்கள் மனவேற்றுமைகள் ஏற்பட இடமுண்டு. புதிய தொழில்கள் ஆரம்பிக்கவும் சிறந்த மாதமல்ல.

விவசாயிகட்கு விவசாயி சனி 8-ல் செவ்வாயுடன் சஞ்சரிப்பதால் செலவுகளையும் தொல்லைகளையும் ஏற்படுத்தும். காணி சம்பந்தமான வழக்குகளும் ஏற்படும். முதலீட்டுக்கேற்ற லாபம் கிட்டுவது கஷ்டம்,

மாணவர்கட்கு கல்விக்குரிய கிரகம் புதன் மாதமுற்பகுதியில் 4-லும், பிற்பகுதியில் 5-லும் சஞ்சரிப்பதால் மாதத் தொடக்கத்தில் சுகக்குறைவுகள் ஏற்படினும் பிற்பகுதி நற்பலன்களைத் தரும். உற்சாகமாகக் கல்வியில் முன்னேற இடமுண்டு.

பெண்கட்கு காதல்க்கிரகம் சுக்கிரன் 4-ல் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் சிறப்பும் ஏற்படலாகும். காதலில் வெற்றியும், கலியாணப் பேச்சுக்களில் திருப்தியான முடிவும் ஏற் ஏற்பட இடமுண்டு. ஆடை ஆபரண சிறப்புண்டாகும்.

அதிஷ்ட நாட்கள்: ஜூன் 21, 22, 29 மு.ப, 30
ஜூலை 1, 5, 6.

துரதிஷ்ட நாட்கள்: ஜூன் 27 பி.ப, 28, 29.
ஜூலை 7, 8, 9 மு.ப.



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி,

மீனராசிக்காரருக்கு சூரியன் சுவர்ணமூர்த்தியாக 4-ம் வீட்டில் சஞ்சரிப்பது மிகவும் நன்று. முன்பிருந்த கஷ்டநஷ்டங்கள் நிவிர்த்தியடைய இடமுண்டு. 7-ல் செவ்வாய், சனி 8-ல் வியாழன் கஷ்டங்களை ஏற்படுத்தினுலும் சூரியனின் மூர்த்தி பலத்தால் பாதுகாப்புக்கிட்டும். பிரயாணங்கள் முதலியன சிறப்பாக அமைவதுடன் லாபம் உண்டாகும். உறவினரிடையே மகிழ்ச்சி நிலவும். பெற்றோர் வழியால் நற்பலன்கள் கிட்டும். பொருளாதாரநிலை சற்று மந்தமாகவே இருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் அதிபதி செவ்வாய் 6-ம் வீட்டில் சனியுடனும், வியாழன் 8-ல் இலும் சஞ்சரிப்பதால் குடும்ப உறவினரிடையே பல சிக்கல்களுக்கிடமுண்டு. வாக்குக் கலகங்கள், அவமானம் என்பன ஏற்படலாகும். பொருளாதாரத் துறையும் சிறப்பாக இராது.

வியாபாரிகட்கு வங்கிநிலை திருப்தியளிக்காது. கூட்டுறவு வியாபாரத்தால் ஓரளவு நன்மையுண்டு. அலங்காரப் பொருட்கள், வாகனம் முதலியன விற்பனை செய்வோர் கூடிய பயன் பெறுவர்.

உத்தியோகஸ்தர்கட்கு சிறப்பான மாதம். அரசியல் கிரகம் சூரியன் தொழில்களில் சிறப்பையும், சக ஊழியர்களின் ஒத்துழைப்பையும், மேலதிகாரிகளின் மதிப்பையும் உண்டாக்குவார். மறைமுக எதிர்ப்புகள் இருப்பினும் வசதியான இடமாற்றம் முதலியனவும் ஏற்படலாம்.

விவசாயிகட்கு மூர்த்திபலம் பெற்ற சூரியன் பலவகையிலும் நற்பலனையே நல்குவார். பயிர்ச்செய்கையில் லாபமும் முன்னேற்றமுமடைவீர்கள். கிழங்குப் பயிர்கள் கூடுதலாக விருத்தியடையும்.

தொழிலாளர்கட்கு முதலாளிகளால் நன்மையுண்டாகும். தொழிலற்றோர் தொழில் வாய்ப்புகளைப் பெறுவர்; சகதொழிலாளர் ஒத்துழைப்பு நல்குவர். சொந்தத் தொழில் கூடிய பலனை யளிக்கும்.

மாணவர்கட்கு சிறந்த மாதம். கல்வியில் ஊக்கமும், அபிவிருத்தியும் காணப்படும். மாத பிற்பகுதி கல்வித்துறைக்கு மிகுந்த சிறப்பைத் தரும். கணிதத் துறையிலும், தொழிற் கல்வியிலும் ஈடுபட்டோர் கூடிய நன்மையடைவர். பிரயாணங்களும் கல்விக்காக ஏற்படலாம்.

பெண்கட்கு இம்மாதம் நடுத்தர பலனையே காட்டுகின்றது. விவாகப் பேச்சுகள் பெரும் தடைகளின் பின்பே அனுகூலமாகும். குடும்ப வாழ்க்கையிலும் சிக்கல்கள் தோன்றும். காதல் முயற்சிகளிலும் தடைகள் உருவாகும்.

அதிஷ்ட நாட்கள்: ஜூன் 23, 24, 25 மு.ப,
ஜூலை 2, 3, 4, 7, 8, 9 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: ஜூன் 29 பி.ப, 30, 1,
ஜூலை 10, 11.


### மட்டுநகர்
### சோதிட மகாநாட்டில்
### சிந்திய முத்துக்கள்

"நாங்கள் திருக்கணித பஞ்சாங்கத்தையே உபயோகிக்கின்றோம்."

கருத்தரங்கில் தலைவர்
S. மார்க்கண்டு.

★

ஆதிபத்தியம் மிக முக்கியம். இதை பத்தியத்தோடு பிரயோகித்தல் வேண்டும்.

— திரு எஸ். விவேகானந்தன்.

சோதிட ஆராய்ச்சி

# தமிழ் ஈழம் மலருமா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வே. சின்னத்துரை நல்லூர்

16-10-80 ஜனதிபதி ஆணைக் குழுவினல் குற்றவாளி என்று காணப்பட்ட திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சகல அரசியலிலும் பிரவேசிக்க முடியாதென்ற பிரகடனத்துடன் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

19-11-80 பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் நிகழ்த்திய உரை.

"இது சிறிலங்காவின் வரவு செலவுத் திட்டம். இதற்கும் தமிழ் ஈழ மக்களாகிய எமக்கும் சம்பந்தம் கிடையாது. சிங்கள இனம் உங்களுக்கு ஆட்சி அதிகாரம் தந்திருக்கிறது. சிங்கள அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்கள் பற்றி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஆனல் இலங்கைத் தீவில் அரசியல் ஸ்திரம் இருப்பதாக நிதியமைச்சர் கூறியதை ஏற்க நான் தயாராக இல்லை.

இங்கே அரசியல் ஸ்திரம் இருப்பதாகச் சொல்வதால் தான் உங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து உதவிகளும் கடனும் கிடைக்கிறது. ஆனல் உண்மையில் இலங்கையில் அரசியல் ஸ்திரம் என்பது கிடையாது.

சபாநாயகர்: உங்களது மாவட்ட அமைச்சர் யூ. என். பி. விஜயக்கூன் உங்களைக் கடுமையாகப் பார்க்கிருரே.

திரு. கதிரவேற்பிள்ளை: தமிழ் மக்கள் தமது தனி நாட்டை மீளப் பெறுவதற்காக எமக்கு ஆணை தந்தார்கள். அந்த ஆணையை நாம் பிரயோகிக்க விடாமல், நீங்கள் தமிழ் ஈழத்தை உங்கள் ஆயுதப் படைகளைக் கொண்டு முற்றுகையிட்டுள்ளீர்கள்.

யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபரின் இல்லம் இராணுவ முகாமாக்கப்பட்டிருக்கிறது. வவுனியாவில் இராணுவ முகாம் அமைக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ முகாம் எனது வீட்டிலிருந்து இரண்டு மைல் தொலைவில் இருக்கிறது.

ஒரு குரல்: அது உங்களுக்குப் பாதுகாப்பு அல்லவா?

கதிரவேற்பிள்ளை: அங்கு இராணுவம் இளைஞர்களையும், மக்களையும் சுட்டுக் கொன்றது. நாம் அகிம்சை நெறியைக் கடைப்பிடிப்பவர்களாகையால் எமது மக்களை இராணுவத்தினர் சுலபமாக சுட்டுக் கொன்றுவிடுகின்றனர். சுட்ட இராணுவ பொலிஸ் அதிகாரிகளோ, தொடர்ந்து பதவியில் இருக்கின்றனர்.

இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர், இராணுவத்தால் தமிழ் ஈழத்தில் எத்தனை பேர் கொல்லப்பட்டு விட்டனர்? இதிலிருந்து இங்கு அரசியல் ஸ்திரம் கிடையாது. ஆயுதப் படைகளின் அடக்குமுறையே நிரந்தரமாக இருந்து வருகிறது என்பது உலகுக்கு நன்கு தெரியும்.

உங்கள் சொந்த நாட்டில் உங்கள் சொந்த எதிர்க்கட்சியில் உள்ளோரின் குடியியல் உரிமையை இரத்துச் செய்து, அரசியல் ஸ்திரத்தை ஏற்படுத்தியிருக்கின்றீர்கள். உங்கள் நாட்டில், ஒரு கட்சி ஆட்சியுமல்ல — ஒரு தனி மனிதரின் ஆட்சியை ஏற்படுத்தப் பார்க்கிறீர்கள். துப்பாக்கி முனையில் இராணுவ ஆதிக்கத்துடன் குடியியலுரிமைகளை இரத்துச் செய்துதான் நீங்கள் சொல்லும் அரசியல் ஸ்திரம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஈரானில் ஷா மன்னர் ஏற்படுத்தி வைத்திருந்தது போன்ற அரசியல் ஸ்திரமே இங்கு இன்று காணப்படுகிறது.

தமிழ் தேசிய இனம் தனது தனி நாட்டை மீளப்பெறுவதற்கே 1977-ம் ஆண்டில் எமக்கு ஆணை தந்ததென்பதை ஒப்புக்கொள்ள முடியாது என்று ராஜாங்க அமைச்சர் முன்னெரு தடவை இச்சபையிலே கூறினர். தமிழ் மக்களின் விருப்பம் என்னவென்பதைத் தெரிந்துகொள்ள சர்வஜன வாக்கெடுப்பொன்றை தமிழர் வாழும் பிரதேசத்தில் நடத்தலாமென அவர் தைரியத்துடன் ஆலோசனை கூறினர். அதை அமுல் நடத்துங்கள். வெளிநாட்டுத் தலையீடின்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க இதுவே ஒரே வழி.

நீங்கள் தமிழீழத்தையும், அதன் தலைநகரான திருகோணமலையையும் உங்களுடன் வைத்திருக்க

ஆங்கே வெளிநாட்டு ஆதிக்கத்தை வரவழைக்கிறீர்கள். ஈரானின் ஷா மன்னர் தோல்வியடைந்தது போன்றே நீங்களும் வெளிநாடுகளை நம்பி தோல்வியடையப் போகிறீர்கள். வெளிநாடுகள் தமது ஆதிக்கத்தை இங்கே வைத்திருப்பதற்காக உங்களுக்கு கடன் உதவி வழங்குகின்றன. அந்த உதவியுடன் பட்ஜட் தயாரித்திருக்கிறீர்கள். இந்தக் கொள்கையினுல் எமது பொருளாதாரத்தை சோசலிச அமைப்பிலிருந்து முதலாளித்துவ அமைப்பு முறைக்கு மாற்றி வருகிறீர்கள். ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் இதனுல் பணம் தேடுகிருர்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பெறச் சென்றிருப்போர் உங்கள் உதவியின் காரணமாகச் சென்றவர்கள் அல்லர். நீங்கள் அவர்களுக்கு எதுவும் செய்ததால் அல்ல அவர்கள் அங்கு சென்றிருக்கிருர்கள்.

எம்மைத் தனியாக சுதந்திர நாடாக வாழ விட்டு விடுங்கள். உங்கள் முதலாளித்தத்துவ பொருளாதாரக் கொள்கைகளால் சீரழிய நாம் தயாராக இல்லை.

எமது தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை பஞ்சசீலத்தின் அடிப்படையில் நல்லெண்ணத்தின் அடிப்படையில் நீங்கள் அங்கீகரிக்க தவறின், இப்பிரச்சினையோடு சேர்ந்து வெளிநாட்டுத் தலையீடு வரும்போது நீங்கள் அழ நேரலாம். ஆனுல் அப்போது அது காலங்கடந்து பயனற்றதாகி விடும்.

5-12-80 ல் நீதி அமைச்சர் திரு. நிசங்கவிஜயரத்தின பாராளுமன்றத்தில் கூறியது "கனடாவிலுள்ள பிரெஞ்ச மக்கள் தனி நாடு கோரினுர்கள். அப்போது கனடாவில் வாழும் ஆங்கிலேய மக்கள், தம்மிடம் மண்ணெண்ணைக் கிணறுகள் இருப்பதாகவும், ஆகவே பிரெஞ்சு பேசும் மக்கள் பிரிந்து போவதை தாம் அனுமதிப்பதாகவும் கூறினுர்கள். இதேபோல், சிங்களமக்களும் எம்மிடம் தேயிலையும் இறப்பரும் இருப்பதாகவும், பிரிவினை பற்றி தாம் கவலைப்படப் போவதில்லை என்றும் கூறினுல் உங்கள் நிலை எப்படியிருக்கும்?" இதற்கு பருத்தித்துறை பிரதிநிதி திரு.துரைரத்தினம், "எப்பாடுபட்டும் அதைச் செய்யுங்கள்" என்ருர். இவ்விரண்டு கூற்றிலும் பெரிய உண்மைகள் பொதிந்துள்ளன.

அதாவது இலங்கையின் பிறநாட்டுச் செலவாணியைச் சேகரித்துத் தருவது இறப்பர், தேயிலை, தெங்குப் பொருட்களேயாம். வேறு இதர பொருட்களாகிய இரத்தினக் கல்லு, உல்லாசப் பிரயாண வருவாய் மற்றும் இதர ஏற்றுமதிகள் இரண்டாந்தரமான வருமானமாகும். இந்த முக்கிய பொருட்கள் எங்கே விளைகின்றன? தமிழ் ஈழத்தில் அல்ல. ஆனுல் சிறி லங்காவில் சிங்கள நாட்டில் தான். தற்போது தமிழ் மக்களுக்கு உணவு, உடை, உறையுள், கல்வி, வேலைவாய்ப்பு சௌக்கிய சேவை, போக்குவரத்துச் சேவை முதலிய சகலவற்றிற்கும் சிங்கள அரசாங்கமே, ஏன் சிங்கள மக்களே தமது வருவாயை எடுத்து தமிழர்களுக்கு மூன்றில் ஒன்றை பங்கிடுகிருர்கள். ஒரு சிங்களவர் ஏன் எமது பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பகுதியை தமிழர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று கேட்க இடமுண்டு. இப்படி வருடாவருடம் தமிழர்களுக்கு உதவுவதால் தான் சிங்களவர்கள் பொருளாதாரத்தில் குன்றி வந்து குட்டிச்சுவரானுர்கள். இதனுல் தான் எமது சிங்களப் பிள்ளைகட்கு சர்வகலாசாலையில் இடமின்மையும்; வேலைவாய்ப்பு குன்றுதலும், இன்னேரன்ன நிலைகள் விளைகின்றன. ஆதலால்தான் தமிழரிடமிருந்து வெட்டி சிங்கள சமுதாயத்திற்கு கொடுக்கவேண்டி வருகிறது. ஆகையால் தமிழரைப் புறக்கணிக்க வேண்டி வருகின்றது. அத்துடன் பிறநாடுகளிடம் கையேந்திக் கடன் பிச்சை கேட்கவேண்டி ஏற்படுகிறது. இந்நிலை தொடர்ந்தே போய்க்கொண்டிருந்தால் சிறி லங்கா பௌத்த சிங்கள நாடாக ஒரு காலமுமே மிளிர முடியாத நிலை ஏற்படும். நாம் ஆளுகிறேம் என்ற மமதைக்காக எத்தனை கோடானுகோடி ரூபாக்களை தமிழர்களுக்கு கொட்டிக் கொடுக்க நேரிடுகிறது. இதனுல் சிங்கள சமுதாயமே கீழ் நோக்கிக் கொண்டு போகிறது. எத்தனை சிங்களப் பொலிசாரும், சிங்கள இராணுவத்தினரும் வீணுக தமிழ் ஈழத்தில் தம் உயிரை இழந்துள்ளார்கள். தமிழரை ஆள வேண்டும் என்ற மமதையால் தானே. இதற்கு இவ்வளவு செலவு செய்ய வேண்டுமா? ஆகையால் தமிழர்களை அவர்கள் பாட்டில் விட்டு விட்டால் சிங்கள நாடு அதி சீக்கிரத்தில் முன்னேறி சுபீட்சம் அடையும் என்பது திண்ணம். (தொடரும்)

உங்கள் இல்லத்தின் பொக்கிஷம்

**திருக்கணித பஞ்சாங்கம்**

# சதாவதானி கதிரவேற்பிள்ளையின்

# காலடிச்சுவட்டினிலே!

['பவானி' பருத்தித்துறை]

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சந்திரன் பாதகஸ்தானுதிபதியாகி 7-ம், 12-ம் வீடுகளின் குறிகாட்டியாகியபடியால் அவன் மரணத்தையும் கொடுப்பான். அதையும் புதிய சூழலில், வெளிநாட்டில் எதிர்பார்த்தல் வேண்டும்.

இராகு மாரக ஸ்தானத்தில் நின்று 12-ம் வீட்டின் பிரதிநிதியாவதுடன் 9-ம் வீட்டையும் பார்க்கிறுன். இராகு 2-ல் நிற்கும் சனியின் கலேயிலும் நிற்பதால் இராகு புத்தியில் மரணம் ஏற்படல் வேண்டும்.

முன்பு குருவின் காலத்தில் மரணம் கதவைத் தட்டும் என்று குறிப்பிட்டிருந்தோம். எனவே இப்போது இராகுபுத்தியா அல்லது குருபுத்தியா என்ற பிரச்சனை தலேதூக்கிறது. இராகு புத்தியில் ''சாதகர் மின்னல் வேகத்தில் செயல் படுவார்கள். அதைக்கண்ட பலர் அதிசயப் படுவார்கள். சிலர் அதிர்ச்சிக்குள்ளாவார்கள்", என்றும் கூறியிருந்தோம். எனவே அது சாதனேயாயுமிருக்கலாம் அல்லது மரணமாயும் அமையலாம் அல்லவா? ஆனுல் ஒன்றுமட்டும் நன்கு புலனுகிறது. அதாவது இலக்கின முனேயுடன் சம்பந்தப்பட்ட இராகு 7ல் நிற்பதால் பெரும் புகழும் கௌரவமும் அதன் காலத்தில் கிடைக்கும்.

4-ம் வீட்டை இராகு பார்ப்பதுடன் அதன் ஆரம்ப முனேயிலும் இராகு ஆதிக்கம் செலுத்துவதனுல் அதன் காலத்தில் மரணமும் கதவைத் தட்டுகின்றது. அதாவது குருவின் காலத்திற்கு முன்பு இராகுவின் காலத்தில் மாணம் நிச்சயமாகிறது. அதில் சந்தேகம் சிறிதளவேனும் இல்லே. அதன் காரணத்தையும் விளக்கத்தையும் எமது சைவமதம் தான் விளக்குகின்றது. அவைகளே வேருெரு கட்டத்தில் கூறுகின்றேன். பிள்ளேயவர்களுக்கு சந்திரதசை இராகுபுத்தி சந்திர அந்தரம் 1907-ம் ஆண்டு ஜனவரி 19-ம், திகதி தொடக்கம் 1907-ம், ஆண்டு மார்ச் மாதம் 4-ம், திகதி வரை நடைபெறும். எனவே இக் காலம் அவதானத்திற்கு சிறந்த காலமாகும். கோசாரமும் ஒத்துழைத்தால் அவதானத்தில் விசேட சித்தியும் உறுதியாகும்.

அவதானங்களில் அட்டாவதானஞ் செய்வதே அளப்பற்றகாரியம். ஓரேசமயத்தில் எட்டுவிடயங்களே அவதானிப்பதை அட்டாவதானம் என்பார்கள். கைகள் லாடசங்கிலி ஒன்றை அவிழ்த்துக் கொண்டிருக்கும்; கண்கள் கரும்பலகையில் எழுதுவதைக் கவனிக்கும். முதுகில் சிலர் சில சிறு தானியங்களே எறிவார்கள். அவைகள் எத்தனே என்று சொல்லல்வேண்டும். அதேவேளேயில் ஒருவர் கதிர்காமத்தான் மேல் கவிதை ஒன்று பாடச்சொல்லுவார். ஓர் அடி சொல்லும்போது அடுத்தவர் காளிமீது கலித்துறையென்பார். அவருக்கும் ஓர் அடிசொல்லப்படும். உடன் மற்றெருவர் வெறெருரு செய்யுள் பாடுக என்பார். இவருக்கும் ஓர் அடி சொல்லி, பின் முதல்வர் விடுத்த கவிதைக்கு இரண்டாம் அடிசொல்லப்படும். அடுத்தவர்களுக்கும் அவ்வாறே சொல்லி பாடல்கள் பூர்த்தியடையும். வேறு விஞக்களும் நிகழும். அவற்றுக்கும் விடைகூறல் வேண்டும்.

கரும்பலகை அழிக்கப்பட்டுவிடும். எழுதியதைச் சொல்லல் வேண்டும். இங்ஙனமே எட்டு விடயங்கள் பூர்த்தியாகும்.

கதிரவேற்பிள்ளே அட்டாவதானத்தை கருத்தில் கொள்ளவில்லே. எடுத்த எடுப்பிலேயே சோடாசாவதானத்தை செய்ய நினேத்தார். சோடசம் என்ருல் பதினுறு ஒரே சமயத்தில் பதினுறு விடயங்களே அவதானிப்பதை சோடசாவதானம் என்பார்கள்,

அவையாவன பின்வருமாறு அமையும்:-

நாநவில்தல்:- அவதான ஆரம்பமுதல் இறுதி வரை விஞக்களுக்கு விடையிறுக்கும் நேரம் நீங்கலாக இறைவன் நாமத்தை நவின்று கொண்டிருத்தல், பிள்ளேயவர்களோ அவதான காலத்தில் மட்டுமென்ன சைவ பிரசங்க மாரி பொழி

யும் நேரத்திலும், நண்பர்களுடன் உரையாடும் பொழுதும், சதா ''வேலும் மயிலும் துணை'' யென்று நவின்று கொண்டிருப்பார்கள்.

கரங்கள் பணியாற்றல்:- ஆரம்பம் முதல் இறுதி வரை கரங்கள் இலாடச்சங்கிலி வைத்துப் பூட்டவும் கழற்றவும் செய்தல் வேண்டும்.

அவைத் தலைவருடன் அளவளாவுதல்:- அவதானம் நடத்திக் கொண்டிருக்கும் காலத்தில் அவைத் தலைவரோடு ஏதேனும் ஒரு பொருள் பற்றித் தொடராக உரையாடல் வேண்டும். இதுவும் தொடக்கம் முதல் முடிவு வரை நிகழ்தல் வேண்டும்.

சுவைப்புலனறிவு:- அவதானம் நடத்திக் கொண்டிருக்கும் போது பலவித மாறுபட்ட நீர் நிலைகளிலுள்ள நீரைக் குடிக்கச் செய்து அவை இன்ன இன்ன நீர் நிலைகளிலிருந்து எடுக்கப்பட்டன எனக் கூறப்படும். பல நிமிடங்களுக்குப்பின் ஏதேனும் ஓரிரு நீர் நிலைகளிலிருந்து பெற்ற நீரைக் கொடுக்க அவதானி நீரை அருந்திப் பார்த்து அவை இன்ன இன்ன நீர் நிலைகளிலிருந்து எடுக்கப்பட்டது எனக் கூறுவர்.

இலக்கியம்:- இலக்கிய நூல்களில் இருந்து வினவும் வினாக்களுக்கு விடையிறுத்தல்.

இலக்கணம்:- அவையிலுள்ளோர் வினவும் இலக்கண வினாவிற்கு விடையிறுத்தல்.

வெண்பா கூறுதல்:- அவையோர் ஒருமுறை வாசித்த புதிய வெண்பாவை அவதானித்து திரும்பச் சொல்லுதல்.

பாடல் பத்திரிகை:- ஏதாவது ஒரு பாடலின் அடியில் உள்ள. ஒவ்வொரு எழுத்துக்களையும் இலக்கமிட்டு ஒவ்வொரு தனித்தனி துண்டுகளாக வெட்டி ஒரு இடத்திலிட்டு குலுக்கி வைத்திருப்பார்கள். பாடலிலுள்ள அடித்தொகையையும் ஒவ்வொரு அடியிலுமுள்ள இலக்கத்தொகையையும் கூறுவார்கள். அவதானி முன் வரும்போது ஒரு துண்டை எடுத்து இன்ன எண் கொண்ட எழுத்து இன்னது என்று கூறுவார்கள். ஒவ்வொரு முறையும் ஒவ்வொன்றாகக் கூறப்படும் எழுத்துக்களை மனதில் பதித்துக் கொண்டு மூன்ரும் முறைக்குப்பின் எவ்வளவு விரைவில் அப்பாடலைக் கூற முடியுமோ கூறல் வேண்டும்.

கவிபாடல்:- கேள்வியாளர் விரும்பும் யாப்பும் பொருளும் அமையக் கொடுக்கும் முதல் இறுதி எழுத்துக்கள் யாவும் கேட்டபடி கவியெடுத்து முடித்தல் வேண்டும்.

ஒலியுணர்வு:- வேறுபட்ட நிறை உடைய உலோக பாத்திரங்களை திரைமறைவில் வைத்து தட்டி ஒலி எழுப்பி அவை இன்ன இன்ன நிறையுள்ள பாத்திரத்திலிருந்து உண்டானவை என்று கூறப்படும். அவைகளை அவதானித்த பின்பு சில நிமிடங்கள் கழித்து ஏதேனும் ஓரிரு பாத்திரங்களைத் தட்டி ஒலிகள் எழுப்பப்படும். அவ்வொலிகள் மூலம் பாத்திரங்களின் நிறையைக் கூறல்.

நெல் எறிதல்:- சுற்றிச் சுழன்று அவதானம் செய்துவரும் போது அவரது முதுகில் நெல்மணி எறியப்படும். அவதான முடிவில் எறியப்பட்ட நெல்மணிகள் எத்தனை என்று கூறல்,

உழுந்து எறிதல்:- மேற்கூறியவாறு உழுந்தும் எறியப்படும் முடிவில் எறியப்பட்ட உழுந்துமணிகள் எத்தனை எனக் கூறலாம்.

கணிதம்:- அவையிலுள்ளோர் வினவிய எண்களின் கூட்டுத்தொகை பெருக்குத் தொகைகளைக் கூறல்.

வாரம் கூறல்:- ஆயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்ட ஆண்டு, மாதம், திகதி கூறும்போது அதற்குரிய வாரத்தைக் கூறல்.

நாயும் புலியும் விளையாடல்:- மூன்று புலிகளை 15 நாய்கள் கூடித் தடைப்படுத்தல், விளையாட்டில் அவதானியின் ஆளாக ஒருவர் இருப்பார். அவதானத்தின் போது தமது ஆளிடம் நகர்த்த வேண்டிய காய்களை கூறி விளையாட்டில் வெற்றியீட்டல்.

நட்சத்திரம் கூறல்:- பிறந்த ஆண்டு, மாதம், நாளும் கூறும் போது நட்சத்திரம் கூறல்.

நன்னூற் காண்டிகை விருத்தியுரை ஆசிரியராகிய வித்துவான் வ. குமாரசாமிப் புலவர் தலைமை வகிக்க, அநேக செந்தமிழ்ச் செம்மல்களும், பண்டிதசிகாமணிகளும், சமஸ்கிருத பண்டிதர்களும் புதுச் சந்நிதியில் குழுமியிருக்கும் காலை பிள்ளையவர்கள் ''வேலும் மயிலும் துணை'' என்ற நாமத்துடன் தமது சாதனையை ஆரம்பித்தார். யாவரும் வியப்புற்று மகிழ்ச்சியோங்க பிள்ளையவர்கள் சோடசாவதானம் செய்து காட்டினர்.

அதன்பின் அஷ்டதசாவதானமும் பலநிபுணர்களின் முன்னிலையில் பருத்தித்துறை நகரின்கண் அமைத்துள்ள சிவாலயத்தில் செய்யப்பட்டது. பதினெட்டுவிடயங்களை ஒரேசமயத்தில் அவதானிப்பதை அஷ்டதசாவதானம் என்பர்.

# ஜன்ம லக்னம்

## மகர லக்னம்

(சித்திரை இதழ் தொடர்ச்சி)

ஆன்மீக வாழ்வில் சிவனைக்குறிக்கும் சூரியனும், சிவசக்தியைக் குறிக்கும் சந்திரனும் லௌகீக வாழ்வில் அரச தம்பதிகளாகக் கருதப்படுவதாலும், அவர்கள் ஒரு வீட்டை மட்டும் பெறுவதாலும், அவர்களுக்கு அட்டமாதிபத்திய (8-ம் ஆதிபத்திய) தோஷம் கிடையாதென பராசரர் பகர்ந்துள்ளார். ஆனால் ஒரு சிலர் அவர்களுக்குச் சிறுதோஷம் உண்டென்று கூறியுள்ளனர். சூரியன் இலக்கினாதிபதியான சனிக்குப் பரம சத்துருவாக வருவதால், சிலசமயங்களில் சிறு தோஷத்தை ஏற்படுத்தக்கூடுமெனக் கொள்வதே ஏற்புடையதாகும். சூரியன் அட்டமாதிபத்தியம் பெற்றாலும், தன் தசா புத்தி காலங்களில் மாரகராகச் செயல்படாது விடக்கூடுமென்றும், அவர் பாதகமான ஸ்தானங்களை மேவில் அனேகமாக அமைதியற்ற நிலையையும் துன்பங்களையும் நல்குவரென்றும் காளிதாசர் கூறியுள்ளார். பொதுவாகச் சூரியன் 3-ம், 6-ம், 8-ம், 10-ம், 11-ம் பாவங்களில் மிக அனுகூலமான பலன்களைத் தர வல்லவராவர். அவர் 3-ல் நிற்கில் நீண்ட ஆயுளும், சத்துருநாசமும் ஏற்படும். 6-ம், 8-ம், பாவங்களில் அமர்வரேல் விபரீத ராஜயோகம் ஏற்படும். அவர் 10-ம் பாவத்தில் நீசம் அடைந்தாலும், திக்குப்பலம் பெற்று நல்ல பலன்களையே நல்குகிறார். பகலில் ஜெனனமானவர்களுக்கு 11-ம் பாவத்தில் சூரியன் சஞ்சரித்தால் ஜாதகத்திலுள்ள கோடி குற்றங்களைப் போக்க வல்லவராக அவர் செயல்படுவார் என காக்கை முனிவர் கூறியுள்ளார், இராக்காலத்தில் மகர லக்கினத்தில் ஜனித்த பெண்களுக்கு சந்திரன் சூரியன் ஆகியோர் இரட்டை ராசிகளான பெண்ராசிகளில் நிற்பரேல் "மகா பாக்கிய யோகம்" ஏற்படுமென்றும், அவர்களுக்கு சூரியன் 3-ம், 11-ம் பாவங்களை அலங்கரிக்கின் ஷி யோகம் மிக விசேட பலன்களைக் கொடுக்குமென்றும் கூறற்பாலதாம். சூரியன் ராகுவின் நட்சத்திரங்களான திருவாதிரை, சுவாதி ஆகியவற்றில் சஞ்சரிக்க, ராகு திடமாக இஷ்டஸ்தானங்களை மேவுவரேல், பிரபல இராஜ யோகம் ஏற்படும், சூரியனும் செவ்வாயும் 11-ம், 6-ம், பாவங்கள் தவிர்ந்த ஏனைய பாவங்களில் ஒன்று சேர்வது தீது. சூரியனும், களத்திர காரகனான சுக்கிரனும் ஒன்றாக இணைவரேல், நல்லதிருஷ்ட பலன்கள் சூரிய தெசையில் ஏற்படக் கூடுமாயினும், அனேகமாக ஆரோக்கிய மற்ற மனைவியோ/கணவனோ வாய்க்கப்பெறுமென்றும் அதனால் அவர்களின் தாம்பத்திய வாழ்க்கை இன்பகரமற்றதாகவே அமையக் கூடுமென்றும் கூறற்பாலதாம். சூரியனும் லக்கினாதிபதியான சனி பகவானும் கூடினால் சூரிய தெசையில் பெரும்பாலும் நல்லதிருஷ்ட பலன்கள் நடக்கக் கூடுமென்றும், சனி தெசையில் சரீர பாதை, தார பீடை, தனநாசம், வழக்குகளால் சஞ்சலம், அதிகார பங்கம், அபகீர்த்தி, துக்கம் ஆகிய பலன்கள் ஏற்படலாமென்றும் அனுபவரீதியாகக் கண்டுள்ளனர்.

மகர லக்னத்திற்கு பூமனென்னும் செவ்வாய் சுப வீடாகிய 4-ம் பாவத்திற்கும் அசுப வீடாகிய 11-ம் பாவத்திற்கும் அதிபதியாக வருகிறார்.

**அ. சிவசுப்பிரமணியம் B. A, (Lond)**
**மல்லாகம்.**

அவருக்கு 4-ம் வீடு மூலத்திரிகோண வீடாகவும் லக்ன வீடான மகரம் உச்ச வீடாகவும் அமைகிறது. மகர ராசி சர ராசியாவதால், 11-ம் பாவத்திற்கு அதிபதியாகவரும் செவ்வாய் பாதகாதிபதியாகிறார். ஆகவே இவரைப் பாபரென்னும் மாரகர் என்றும் பகர்ந்துள்ளனர். எனினும், இவர் லக்னம் 4-ம், 10-ம், 11-ம் பாவங்களை அலங்கரிப்பரேல் சிறந்த பலன்களைத் தரவல்லுனராகின்றார். 11-ம் பாவம் 4-ம் பாவத்திற்கு 8-ம் பாவமாக வருவதால், இவர் 11-ல் இருப்பின் பெரும்பாலும் தாயாரின் அன்பை இழக்க நேரிடும். செவ்வாய் லக்கினாதிபதியான சனியுடன் கூடி லக்னம் 4-ம், 7-ம், 10-ம், 5-ம், 9-ம், 11-ம் பாவங்களில் சஞ்சரிப்பரேல் ராஜயோகம் ஏற்பட்டு ஜாதகருக்கு நல்ல அந்தஸ்து, ஆஸ்தி, செல்வம் ஆகியன கிட்டும். எனினும், ஜாதகர் திருப்தி

யற்றவராகவும், சந்தோஷம்ற்றவராகவும் காணப் படுவர். ஏனைய பாவங்களில் இவர்கள் இருப்பின் ஆதியில் நல்ல பலனும் மத்தியிலும் இறுதியிலும் சொல்லொண்ணு கஷ்டங்களும், மிக வறுமையும் கொடுப்பர். இவர்களின் சேர்க்கை அனேகமாகச் சிரங்கு, அம்மைநோய், வைசூரி போன்ற தோல் வியாதிகளை ஏற்படுத்தும் என்பர். செவ்வாயும் சனியும் 7-ம் பாவத்தில் காணப்பட்டால், களத் திரயோகம் ஏற்பட்டு நல்ல மனைவியோ/கணவனோ வாய்க்கப்பெறும். இது ஜோதிட விதிக்கு முரண் பட்டதுபோலிருந்தாலும் உண்மையான ஒரு கூற்று. இது மந்திரேஸ்வரால் தெளிவாக எடுத் துக் கூறப்பட்டுள்ளது. பொதுவாக சனியோ, செவ்வாயோ 7-ல் இருப்பது தீது. இலக்கினுதி பதி எந்தப் பாவத்திலிருந்தாலும், அந்தப்பாவம் விருத்தி அடையும் என்ற ஒப்புக்கொள்ளும் உண்மையின்படி லக்னுதிபதியான சனி இங்கு 7-ல் இருப்பது நன்மைபயக்கும். 7-ம் பாவத்தில் சாதாரணமாக இருந்தால் மரணத்தையோ அன் றேல் விவாகரத்தையோ ஏற்படுத்தும். கொடிய செவ்வாய் தனது பகைவனுன சனியுடன் கூடி நீசமாக மாரகஸ்தானமாக 7-ம் பாவத்தில் நின்று சிறந்த களத்திர யோக பலனையும் செல்வத்தை யும் நல்குவதால், அவரை நாம் முழு பாவியாகக் கருதுவது பொருத்தமற்றதாகும். புதுமையும் புரட்சிப் பெருமையும் படைத்து சர்வாதிகாரி களாகப் பெருமைபெற்ற ருஷிய நாட்டுச் ஸ்டா லினுக்கும் சீனு நாட்டின் மாவோவுக்கும் முறையே செவ்வாய் ஆட்சியாக 4-ம் பாவத்தி லும், 11-ம் பாவத்திலும் இருந்து தனது தசா காலத்தில் யோகத்தை ஏற்படுத்தியது இங்கு உற்றுநோக்கத்தக்கது. பூமனென்னும் செவ்வாயு டன் பிரபலயோக காரகனும் சம்பத் காரகனு மான சுந்தராங்கன் என்னும் சுக்கிரன் கூடி பலாதிகராக இஷ்டஸ்தானங்களை மேவினுலும் அன்றேல் பரிவர்த்தனம் பெற்றுலும், யோகம் ஏற் பட்டு அவர்களின் வலிமையின் தராதரத்திற்கு ஏற்ப அவர்களின் தசாகாலங்களில் தன தானிய பூமிகள் விசேஷிக்கும். பெரும்பாலும் இவர்கள் அதிக காமத்தை உண்டுபண்ணக் கூடும் என்பர். ஆகவே குருபார்வை இவர்களைச் சாந்தப்படுத்து வதுடன் சம்பத்தையும் அதிகமாக்கும். குரு வின் சேர்க்கையிலும் பார்க்க அவர் பார்வையே சாலச்சிறந்ததென அறிக. பொதுவாகச் செவ் வாயும் வியாழனும் சேர்ந்திருப்பதிலும் பார்க்கச் செவ்வாயை வியாழன் திருஷ்டிப்பதே விரும்பத் தக்கது, செவ்வாயும் வியாழனும் ஒன்று கூடுவ தால் ''குரு-மங்கள'' யோகம் ஏற்படுமென்றும் அனேகமாக வியாழ தெசையின் நடுப்பகுதியி லேயே யோகபலன் உண்டாகுமென்றும் சொல் லப்படுகிறது. செவ்வாயும் புதனும் இணைந்து இஷ்டஸ்தானங்களில் காணப்பட்டால் நல்ல தன யோகம் சித்திக்கும்.

தேவ குருவாகிய வியாழன், சகோதரம், வீரியம், மிருத்யு ஆகியவற்றைக் குறிக்கும் 3-ம் பாவம், சயன சுகபோக சௌக்கியம், தியாகம், விரையம், மோக்ஷம் ஆகியவற்றைக் குறிக்கும் 12-ம் பாவம் ஆகிய இரு நாசஸ்தானங்களுக்கு அதிபதியாக வருவதாலும் மகர ராசியில் அவர் நீசம் அடைவதாலும், அவர் பாபரென்றும் மாரகரென்றும் கூறப்படினும், அவர் பூரண பாபர் அல்ல. 3-ம் பாவத்திலும் பார்க்க 12-ம் பாவம் கொடியது. 12-ம் பாவத்திலும் பார்க்க 6-ம் பாவம் கொடியது. 6-ம் பாவத்திலும் பார்க்க 8-ம் பாவம் கொடியது. 3-ம், 12-ம் வீடுகள் சுபர் வீடுகளாக அமைந்து அங்கு இயற்கைச் சுபர்கள் இருந்தால் தீயவிளைவுகளைக் குறைவாகவே சிருஷ் டிப்பார். இயற்கைச் சுபர்களுள் பூரண சுபனுன வியாழன் இவ்விஷயத்தில் பெரும்பாலும் மெது வாகவும் நிதானமாகவும் செயல்படுவர். இரு எதிர்மறைகள் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்தும் என்ற கொள்கை, $- \times - = +$ என்ற கணித விதி, ''கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜ யோகம்'' என்ற இவற்றிற்கு இணங்க வியாழன் விபரீத ராஜயோகத்தை ஏற்படுத்தி 3-ம், 6-ம், 12-ம் பாவங்களிலிருந்தாலும், நீசமாக லக்கின பாவத்தை அலங்கரித்தலும் விரும்பத்தக்கன. வியாழன் மகரலக்னத்தில் நீசம் பெற்றிருந் தாலும், நல்ல திருஷ்ட வாழ்வும் அதிக செல் வச் செழிப்பும் ஏற்படுமென்று ''ஜாதக பாரி ஜாதம்'' பகருகிறது. மைசூரில் இராஜப்பிரதி நிதியாக இருந்து சிறப்பாக ஆட்சி நடத்திப் புகழ் ஈட்டிய ஒரு மகா ராணிக்கும், வைறத் திராபாத் நிஜாம் அவர்களுக்கும் மகரலக்னத் தில் நின்ற வியாழன் பெரும் செல்வத்தைக் கொடுத்தது உற்றுநோக்கத்தக்கது. வியாழன் 4-ம் 10-ம் பாவங்களில் அமரும் பொழுது புனித மான ஆன்மீக சக்தியை ஏற்படுத்துகிறது. இவர் திரிகோணங்களான 5-ம், 9-ம் பாவங்களில் நின் ருல் சில கால வாழ்க்கைப் போராட்டத்தின் பின்னரே ஆத்மீக சக்தி விருத்தி அடையும். 12-ல் வியாழனும் ராகுவும் இருந்தால், ராகு தெசையில் ஜாதகன் பெரிய தனவந்தனுவான்.

இடபத்தில் இருக்கின்ற சந்திரனை வியாழன் திருஷ்டிக்க, லக்னத்தில் புதனும் சுக்கிரனும் அமர்வரேல், மிக பலமுள்ள ஒரு இராஜயோகம் ஏற்படும். குரு, சந்திரன் ஆகியோர் ஒன்று சேரின் சந்தோஷமான முகபாவமும், பருத்த தேகமும், இனிய குணமும் உடைய மனைவியோ/ கணவனோ வாய்க்கப்பெறுமென்றும், சந்திர தெசையோ அன்றேல் வியாழ தெசையோ நல்ல அதிருஷ்டபலன்களை நல்காதென்றும் கூறு பாலதாம். வியாழன் சுக்கிரன் ஒன்றுசேர்ந் தால் நல்லபலன்களை நல்கா. ஒருவர் வறுமை அடைய மாட்டார். ஆனல் செல்வந்தனுக வரவும் மாட்டார். வியாழன் 1-ம், 4-ம், 5-ம் வீடுகளில் சுக்கிரன் புதன் ஆகியோருடன் ஒன்று கூடின் 'கலாநிதி யோகம்' ஏற்படும். இவர்கள் உபசயஸ்தானங்களான 3-ம், 6-ம், 10-ம், 11-ம் பாவங்களில் ஒன்று சேர்ந்தாலும் அன்றேல் தனித்தனியாக நின்ருலும் அதிக செல்வத்தை நல்கும் ''வசுமதி யோகம்'' ஏற்படும்.

(தொடரும்)

மட்டுநகர்

## சோதிட மகாநாட்டில் சிந்திய முத்துக்கள்

நாம் வாழ்க்கையில் கடிகாரத்தை நம்பி பல கருமங்களை மேற்கொள்ளுகின்றோம். கடிகாரம் சரியாக இயங்காவிட்டால் விளை யும் அனர்த்தங்கள் பல. அதுபோலவே பஞ்சாங்கத்தை நம்பி சமயானுஷ்டானங் களைச் செய்கிறோம். அப்பஞ்சாங்கம் சுத்த மான கணிப்புடையதாக இருத்தல் அவசி யம்.

சி. சிதம்பரநாதக் குருக்கள்
திருக்கணிதர்.

ஆய்ர்பாடி கதாப்பிரசங்கத்தில்

''நாங்கள் வாக்கிய பஞ்சாங்கத்தை உபயோகித்தாலும் அதில் ஏற்படும் பிழை களை திருத்திக்கொள்வதற்கு திருக்கணித பஞ்சாங்கத்தை உபயோகித்துக் கொள்ளு கிறோம்.'' த. மயில்வாகனம்

# பிறந்த திகதிப்படி உங்கள் திறமை சாமர்த்தியம்

வே. சின்னத்துரை, நல்லூர்

நீங்கள் எந்த வருடத்திலாயினுஞ்சரி, எந்த மாதத்திலாயினுஞ் சரி ஏதோ ஒரு திகதியில் பிறந்திருப்பீர்கள். பிறக்கும் ஒவ்வொரு திகதிக் கும் ஒரு பலனுண்டு. பரவலாக அவற்றை இங்கே கூறுவாம்.

## திகதி 24-ல் பிறந்தவர்கட்கு

உம்முடைய சீவியத்தில் அழகு, அன்பு வசீ கரம் என்பனவே முக்கியம் எனத் தோன்றும். அருவருப்பான, மலிந்த, இருண்டவற்றை நீர் சகிக்கமாட்டீர். மனோரம்மியமான அழகான பொருட்களும், வில்லங்கம், தொந்தரவு கொண்டுவர ஆட்களும் உம்மைச் சுற்றியிருப் பதை விரும்புவீர். கலை அல்லது நடன நாட் டிய, நடிப்பு துறையில் நீர் தொழில் புரிய விரும்புவீர். நடிப்புக்கு மேடை அலங்காரம்- உடைகள் அணிகலன்கள் ஆக்கல், பூக்கடை அலங்கார வேலைகள் முதலியவற்றில் உமது ஆக்க பூர்வங்கள் நன்கு தென்படும்.

அரசில் உம்முடைய கவனமிருப்பினும் உம் மில் கொஞ்சம் சுயநல நாட்டமுண்டு. உம் முடைய சீவியத்தில் அழகில் முக்கியத்துவம் காட்டும் நீர், மற்றவர்களுடைய தொடர்பில் மற்றவர்கள் உம்மிடம் எதிர்பார்க்கும் கருணை யை நீர் விலத்திவிவீர். நண்பர்களுடைய அன்பும், பக்தியும் தேவையெனில் கொஞ்சம் கூடுதலாக வெளிநோட்டமாக திரும்பி மற்ற வர்களுடைய கஷ்டங்களையும் கொஞ்சம் உண்மையான ஊக்கத்துடன் செவிமடுங்கள். உமக்கு அன்பர்களும், நண்பர்களும் வேண்டு மென்ருல்' புத்திசாலித்தனமாகத் தெரிவு செய்து உமக்கு நலம் வரக்கூடிய அளவுக்கு கொடுத்துதவுங்கள்.

# வளரும் விண்ணியல்

## 3

கிறீஸ்து பிறப்பதற்கு முன்னும், அவர் பிறந்த பின்னும் உத்தராயண ஸ்தானமும், விஷுவஸ்தானமும் எவ்வெவ் நட்சத்திரங்களில் அமர்ந்திருந்தனவென்பதைக் கீழேயுள்ள அட்டவணையிற் காணலாம்.

உத்தராயண ஸ்தானம்

| | | |
|---|---|---|
| கி. மு. | 2550 | மகத்தின் இறுதி |
| கி. மு. | 1590 | ஆயிலியத்தின் இறுதி |
| கி. மு. | 630 | பூசத்தின் இறுதி |
| கி. பி. | 330 | புனர்பூசத்தின் இறுதி |
| கி. பி. | 1290 | திருவாதிரை இறுதி |

வஸந்த விஷுவஸ்தானம்

| | | |
|---|---|---|
| கி. மு. | 2310 | கார்த்திகையின் இறுதி |
| கி. மு. | 1350 | பரணியின் இறுதி |
| கி. மு. | 390 | அசுவினியின் இறுதி |
| கி. பி. | 570 | அசுவினியின் ஆரம்பம் |
| கி. பி. | 1530 | ரேவதியின் ஆரம்பம் |
| கி. பி. | 2490 | பூரட்டாதியின் இறுதி |

தற்காலத்தில் நாம் கைக்கடிகாரங்களை நோக்கி வெகு இலகுவாக நேரத்தையறிவது போல் அவர்களும் மைதானங்களிற் திரிகையில் ஆகாயத்தினிடத்தே சென்றுகொண்டிருந்த நட்சத்திரங்களைக் கொண்டு நேரத்தை அறிவாராயினர். சூரிய உதய காலத்தைப் பகலின் தொடக்கமாகக் கொண்டனர். சூரியோதயத்துக்குச் சில விநாடிகட்கு முன் தோற்றும் ஓர் ஒளியுள்ள நட்சத்திரம் ஒவ்வொரு நாளும் உதயமாவதை அவர்கள் அவதானித்து அக்காலங்களில் உலகத்தில் நிகழும் சம்பவங்களையும் அவதானித்து வருவாராயினர். மிக்க ஒளி கொண்ட புனர்பூச நட்சத்திரம் சூரியனுடன் சேர்ந்து உதித்த காலத்தில் நீலநதி (Blue Nile) யாறு பெருக்கெடுத்து எகிப்து தேசத்தை அழித்ததென்று கூறினர்.

மேலும், அந்நாட்களில் விரிந்த கற்பனாசக்தி கொண்ட வானநூல் வல்லுனர், தங்களது போர்வீரர்கள் இறந்தவுடன் நட்சத்திர வடிவங்கொண்டு வானத்தில் விளங்கினரென்று கருதினர். இராக்காலத்தில் மைதானங்களிற் திரிகையில் இறந்தவர்களின் சரித்திரங்களைத் தங்கள் தோழர்கட்கு அடிக்கடி கூறியும் வருவராயினர்.

இவ்விதமாக அக்காலத்தில் 48 நட்சத்திரங்கள் விதம் விதமான பெயர்களுடனும், வடிவங்களுடனும் அறியப்பட்டன. இந்நட்சத்திரங்கள் சூரியனுடன் உதித்த காலங்களில் நிகழ்ந்த சம்பவங்களும் குறிக்கப்பட்டு வந்தன. இத்தகைய விஷயங்கள் யாவும் கிரேக்கர் முதலியவர்களின் சிறந்த காப்பியங்களிற் காணலாம்.

இவ்வாறாக அவர்கள் கதைகளைக் கேட்டுக்கொண்டும், ஆடு மாடுகளை ரட்சித்துக்கொண்டும் திரிகையில் கிரகங்களையும் (Planets) அவதானிக்கத் தொடங்கினர். அவர்கள் சந்திரன் வெள்ளிக்கப்பாலிருப்பதாக எண்ணினர். அடுத்தபடியாக அவர்கள் ஏழு வாரங்களையும் (Week Days) ஏற்படுத்திக் கொண்டனர். ஏழு வாரங்களும் ஏழு கிரகங்களின் பெயரால் அழைக்கப்பட்டனவாயினும், அவ்வாரப் பெயர்கள் கிரக ஒழுங்கின்படி இல்லாதிருக்கின்றன. பின்னர் அவர்கள் எம்முறையைக் கொண்டு அமைத்தார்கள் என்பதை ஆராய்வோம்.

அவர்கள் ஒருநாளை இருபத்துநான்கு ஓரையாகப் பங்கிட்டனர். (ஓரையென்பது ஆங்கிலத்தில் கிரேக்க அடியாக வழங்கும் "ஔவர்" (Hour) என்னும் சொல்லாகும். சம்ஸ்கிருதத்தில் ஹோரா என்ற பதத்திலிருந்து தமிழில் 'ஓரை' என்ற சொல் வந்ததாகும்.) ஒவ்வொரு ஓரைக்கும் ஒவ்வொரு கிரகம் அதிபதியாயிருப்பதாக வைத்தனர். எவ்வாறெனில் சூரிய மண்டலத்தில் சூரியன் பிரதானமாகையால் அதை மத்தியாக வைத்தனர். மற்றைய ஆறு கிரகங்களிலும் சமீபமான மூன்றை ஒரு பக்கத்திலும், தூரத்திலுள்ள மற்றைய மூன்றையும் மறு பக்கத்திலும் வைத்தார்கள். அதாவது சனி, வியாழன், செவ்வாய், சூரியன், புதன், வெள்ளி, சந்திரன் என்னும் முறையிலாகும். இவ்வொழுங்கின்படி

கிரகங்களை வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஓரைக்கும் (ஒவ்வொரு மணிக்கும்) ஒவ்வொரு கிரகத்தை அதிபதியாக்கினர். அப்பொழுது குறித்த ஓர் கிழமைக்கு முதல் ஓரையதிபதி முக்கியமான சூரியனுக்கே கொடுக்கப்பட்டது. ஆகவே முதலோரை நாயகன் ஞாயிறு ஆதலின் அக் கிழமைக்கு ஞாயிறு என்னும் பெயர் இடப்படலாயிற்று. பின்னர் கிரமப்படியே இருபத்துநான்கு மணிக்கும் ஏழு கிரகங்களும் முறையே மும்முறையதிபதியாக மிகுதியான மூன்று மணிக்கும் மூன்று கிரகம் அதிபதியாகும். ஆகவே அடுத்த தினத்து முதலோரைக்கு நான்காவது கிரகம் அதிபதியாய் வரும். இவ்வொழுங்கின்படி நான்காவது கிரகம் திங்களாதலின் அக்கிழமை திங்களென்று அழைக்கப்படும். இவ்வாறே மற்றைய வாரப் பெயர்களும் ஏற்படலாயின.

மத்தியாசியாவில் வசித்தவர்களுள் அறிவிற் சிறந்தோர் கிராந்தி மண்டலத்தை (Ecliptic) இருபத்தெட்டுப் பகுதிகளாகப் பிரித்து அப் பிரிவுகளுக்கு வெவ்வேறு பெயரிட்டுச் சந்திரன் அனுதினமும் ஒரு பகுதியில் வதிந்து ஒரு மாதத்தில் ஒரு சுற்றுச் சுற்றுகிறதென்பதையும் அறிந்தனர். ஆனால் இவ்விருபத்தெட்டு நட்சத்திரங்களின் பெயர்களில் மாத்திரம் தேசத்துக்குத் தேசம் வித்தியாசம் காணப்படுகிறது. சீனர்கள் நக்ஷத்திரங்களை (Asterisms) 'ஸீயு' என்றழைத்திருக்கின்றனர். ஆசியாவின் அதிமத்திய பாகத்திலுள்ளவர்கள் இவற்றை 'மஞ்சில்' என்றழைக்கின்றனர். சந்திரனின் வீடுகளென்பதே இம் மொழியின் பொருளாகும். எகிப்தியர்கள் இப்பகுதிகளை வெகு நாட்களுக்குப் பின்னரே கையாளத் தொடங்கினர்.

மத்தியாசியாவில் விண்ணூல் ஞானம் இத்தகைய நிலையையடைந்திருந்த காலத்திலேயே மேற்கூறிய சீனர், சல்டியர், ஆரியர் முதலியோர் வெவ்வேறு திசைகளிலுஞ் சென்று குடியேறத் தொடங்கினர். இவர்களெல்லோரும் ஒரே வம்சத்தினரென்பதை நிரூபிக்கக்கூடிய பல கொள்கைகளை உடையவராயிருந்தனர்.

எவ்வாறெனில் அயனங்களையும் விஷுபுண்ணிய காலங்களையும் விசேஷ காலமாகக் கொண்டு யாகம் முதலியன செய்து வழிபட்டனர். வருடத்தில் ஒரேவித கணக்குடைய மாதப் பிரிவுகளைக் கொண்டனர். வாரத்தின் நாட்களையும், பெயர்களையும் ஒரேவிதமாக வழங்கினர். கிராந்தி மண்டலத்தைப் பன்னிரு சமபாகங்களாகப் பிரித்தனர். பெரும்பாலும் ஒரேவிதமான இராசி வடிவங்களை உபயோகித்தனர். ஒரே சங்கியையுள்ள நட்சத்திரப் பகுதிகளை வழங்கினர். இன்னும் இவை போன்ற பல ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் அபிப்பிராய பேதங்களும் காணப்படினும் சரித்திர காலத்துக்கு முந்திய வான சாஸ்திரத்திற் காணப்படும் முறைகள் யாவும் மத்தியாசியாவில் ஆரியர்களென்று பேர்பூண்டு வசித்த எல்லோருக்கும் பொதுவானதென்பதும் அவைகளே தற்கால விண்ணூல்களுக்கு ஆதாரமானவையென்பதும் ஆராய்ச்சியாளர்களுக்கு நன்கு புலனாகும்.

இதுவரையும் ஆரியர்கள் இந்தியாவில் நுழைவதற்கு முன்னிருந்த விண்ணூல் நிலையைப் பற்றிக் கூறினோம். இனி அவர்கள் நுழைந்த பின்னும் ஏற்பட்ட வளர்ச்சியைப் பற்றிக் கூறுவாம்.

## வேதகால விண்ணூல்

ஆரியர் முதன்முதலாக இந்தியாவில் பஞ்சாப் (Punjab) என்னுமிடத்தில் (கி. மு. 2000—கி.மு. 1500) குடியேறிப் பின்னர் கிழக்கே பீகார் (Bihar) வரையும், தெற்கே விந்தம் (Vindhya) வரையும் சென்றதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஆரியர்களுடைய நூல்களுள் மிக முக்கியமானவை சம்ஹிதை (Samhithas), பிரமணாஸ் (Brahmanas), ஆரண்யகம் (Aranyakas), உபநிஷத் (Upanishads) ஆகியனவாகும். இவைகளுள் மிக முந்தியது ருக் வேத சம்ஹிதா (Rig Veda Samhita) வாகும். இது கி. மு. 1500 வரையிலியற்றப்பட்டதாகவும், உபநிஷத்துக்கள் கி, மு. 600 வரையிலியற்றப்பட்டதாகவும், மற்றையவை இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலங்களிலியற்றப்பட்டனவாகவுங் கூறுகின்றனர். வேதங்களிலும், மற்றையவைகளிலுங் கூறப்பட்ட ஊனசாஸ்திர உண்மைகளைக் கவனிக்குமிடத்து நாம் வியப்படையாமல் இருக்க முடியாது.

வேதகால வான சாஸ்திரம் விழாக் கொண்டாட வேண்டிய தினங்களையும், ஜ்யோதிஷ்டோமம் (Gythoishtoma), வாஜஸ்பேயம் (Vajaspeyam) ஆகிய யாகங்களைச் செய்யவேண்டிய காலங்களையும், முறைகளையும் தெரிவிப்பதுடன் அனேக வானசாஸ்திர விஷயங்களையுமுடையதாகும். அக்

காலத்தில் வழங்கப்பட்ட கால அட்டவணை சௌர சாந்திரகால (Luni Solar Calendar) அட்டவணையாகும், வேதகால ஆரியர்கள் கணிதத்திலும் பிரத்தியக்ஷத்தையே மிக முக்கியமாகக் கொண்டனர். கிராந்தி விருத்தத்திலுள்ள நக்ஷத்திரங்களை நன்கறிந்தனர். நக்ஷத்திரங்கள் கார்த்திகையிலிருந்தே எண்ணப்படலாயின. மாதங்கள் சௌரமானப் (Tropical month) படியும் சாந்திர மானப் (Synodical month) படியும் வழங்கப்படலாயின.

சௌர மாதங்கள் தபஸ், தபஸ்ய, மது, மாதவ, சுக்ர, சுசி, நபஸ், நபாஸ்ய, ஈஷ், ஊர்ஜ, சாஹஸ், ஈஹஸ், சஹஸ்ய என வழங்கப்படலாயின.

சாந்திர மாதங்கள் பால்குனம், சைத்ரம், வைசாகம், ஜ்யேஷ்டம். ஆஷாடம், சிராவணம், பாதரபதம், ஆசுவினம், கார்த்திகம், அக்கிரஹாயம், பௌஷம், மாகம் என வழங்கப்படலாயின.

மேலும் தபஸ் — தபஸ்ய என்னும் மாதங்கள் மாரிகாலமெனவும், மாது — மாதவ என்னும் மாதங்கள் வசந்தகாலமெனவும், சுக்ர — சுசி என்னும் மாதங்கள் கோடை காலமெனவும், நபஸ் — நபஸ்ய என்னும் மாதங்கள் கார் காலமெனவும், இஷ் — ஊர்ஜ என்னும் மாதங்கள் இலையுதிர் காலமெனவும், சஹஸ் — சஹஸ்ய என்னும் மாதங்கள் முன்பனிக் காலமெனவும் வழங்கப்படலாயின. சில காலங்களில் முன்பனிக் காலத்தையும், மாரி காலத்தையும் ஒன்றுக்கி ஐந்து பருவகாலங்களாகவும் கொண்டனர்.

அக்காலத்திலுள்ள சற்றறிவாளர் 12 அல்லது 13 சாந்திர மாதங்களை வழங்கினர். சாந்திர மாதத்தைச் சௌரமாதத்துடன் இணைத்தற் பொருட்டு ஐந்து வருட சௌர சாந்திர வட்டத்தை (Five yearly Luni - Solary Cycle) அனுட்டித்தனர். அவ்வருடங்கள் சம்வத்ஸரம், பரிவத்ஸரம், இடாவத்ஸரம், உட்வத்ஸரம், இட்வத்ஸரம் என்னும் பெயரினை யுடையன. ஒவ்வொரு ஐந்து வருட இறுதியிலும் சூரியனும், சந்திரனும் குறித்த நட்சத்திரத்தில் சமமாகி முன்போல சஞ்சரித்து வருமென்பதை அறிந்தனர். மாதங்கள் பூரணை அல்லது அமாவாசையிலிருந்து தொடங்கப்பெற்றன. பூரணை பூரட்டாதி நட்சத்திரத்தில் நிகழும்பொழுது அன்றிரவை அவ்வருட அந்தமாகவும், மறுதினத்தை பாற்குன மாதத் தொடக்கமாகவுங் கொண்டனர். ஓர் அமாவாசையிலிருந்து மறு அமாவாசை வரையும் ஒரு மாதமாகவுங் கொண்டனர். ஓர் குறித்த நட்சத்திரத்தில் நிகழ்ந்த பூரணையானது மறுமுறையும் அதே நட்சத்திரத்தில் நிகழ்வதற்காக 13 மாதங்களையும் கொண்டனர்.

விஷுவங்களையும், அயனங்களையும் காலத்துடக்குக் காலம் அவதானித்தனர். நாற்றிசைகளையும் சங்கு (Gnomon) கொண்டறியும் வகையையும் நன்கு அறிந்தனர்.

இருக் வேதத்தில் (Rig Veda) இவ்வாண்டானது பூமி, ஆகாயம், பவனம் என்னும் மூன்று பகுப்புக்களையுடையதாகவும், ஒவ்வொரு பகுப்பும் பின்னர் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

பூமிக்கும் வானத்துக்குமிடையிலுள்ள தூரம் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. இருக் வேதத்தில் வானத்தின் தூரமானது பூமியினது அளவிலும் பத்து மடங்கு தூரத்திலிருப்பதாகவும்; அதர்வண வேதத்தில் (Atharvana Veda) ஓர் சூரியப்பறவை (Sun Bird) யின் ஆயிரநாள் பிரயாண தூரத்திலிருப்பதாகவும்; பஞ்சவிம்சப் பிரமணத்தில் (Panchavimsa Brahmana) ஒன்றன் மேலொன்று நிறுத்தப்பட்ட ஆயிரம் பசுக்களின் உயர அளவு தூரத்திலிருப்பதாகவும்; ஐத்திரிய பிரமணத்தில் (Aiterya Brahmana) ஓர் குதிரையின் ஆயிரநாள் பிரயாண தூரத்திலிருப்பதாகவுங் கூறப்பட்டிருக்கிறது.

இருக்வேதத்தில் பூமி உருண்டை வடிவமுடையதென்றும், அது ஒன்றிலும் நிலைபெறாது, அந்தரங்கமாக மத்தியில் இருக்கிறதென்றும்; சதபத பிரமணத்தில் (Sathapatha Brahmana) இதன் வடிவம் பரிமண்டலமானதென்றுங் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் இருக் வேதத்தில் ஒரேயொரு சூரியரிருப்பதாகவும் அதுவே கால வகுப்புகளுக்கும், பகலிரவுகளுக்கும், மாத வருடப் பிரிவுகளுக்கும் காரணமென்றும், இன்னும் அச் சூரியன் ஏழு கிரணங்களையுடையதென்றும், அக்கிரணங்கள் வெவ்வேறு நிறக் கிரணங்களையுடையதென்றும் கூறப்பட்டிருக்கின்றன. (தொடரும்)

இராகுவும் கேதுவும் சாயாக்கிரகங்கள் என்றால் நிழல் வடிவமான கோள்கள் எனப் பொருள்படும். கிரகண காலத்தில் சூரியன் மீதும் சந்திரன் மீதும் படுகின்ற நிழல்தான் இக்கிரகங்களால் குறிப்பிடப்படுகின்றன.

கிரகணம் அல்லாத நாட்களில் இராகு கேது அழிந்துவிடுகின்றனவா? கண்களால் காண முடியாது என்பதற்காக அவை இல்லையெனக் கருதலாமா?

# நிழல் நிஜமாகிறது

"பவானி" பருத்தித்துறை

வானவெளியில் எண்ணற்ற கிரகங்கள் பவனி வருகின்றன. அவைகள் எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு கணக்குப் போட்டுச் சோதிடம் சொல்வதானால் முடியாத விடயமாகும். எனவே நம் மூதாதையர்கள் முக்கியமான ஏழு கிரகங்களையும் இரு நிழல்களையும் (இராகு, கேது)வைத்துக்கொண்டு கணித்துப் பலன் கூறினர்கள்.

எண்களில் 1 இலிருந்து 9 வரையும் எவ்வளவு தூரம் முக்கியமானதோ அவ்வளவு தூரம் 7 கிரகங்களும் இரண்டு நிழல்களும் முக்கியமாகி விட்டன.

மேல் நாட்டவர்களால் யூரேனசும் நெப்ரியூனும் (1781, 1846) அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டன. இராகு கேதுக்கள் வரையறுக்க முடியாத காலந் தொட்டு நம் மூதாதையர்களால் கையாளப்பட்டு வருகிறது. எப்போது சூரியன், சந்திரன் முதலியோரைக் கண்டு கொண்டார்களோ அப்போதே நம்மவர்கள் இராகு கேதுக்களையும் கண்டு கொண்டார்கள். அமாவாசையன்று சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சந்திரன் வரும்போது அந்தச் சந்திரன் சூரியனை மறைக்குமானுல் இதை சூரிய கிரகணம் என்கிறோம்.

இதேபோல் பௌர்ணமியன்று சந்திரனுக்கும் சூரியனுக்குமிடையே பூமி வரும்போது பூமியின் நிழல் சந்திரனில் பட்டு சந்திரனை மறைக்குமானுல் அதைச் சந்திர கிரகணம் என்கிறோம்.

இதனால் உண்மையில் பூமியாலும் சந்திரனாலும் ஏற்படுகின்ற நிழல்களே இராகுவும் கேதுவுமாகும். இப்பூமியின்மீது சூரியனும் சந்திரனும் வலிமையான ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதை யாவரும் ஏற்றுக்கொள்கின்றனர். அப்படிப்பட்ட சூரியன், சந்திரன் முதலியோரையே மறைத்து சில விளைவுகளை உண்டாக்கும் (நிழல்களை) இராகு கேதுக்களை ஒதுக்கிவிட முடியுமா? இதனால் சூரியன் சந்திரன் முதலியோருக்குரிய ஆதிக்கத்தை ஆராய்ந்து பலன் கூறும்போது இராகு கேதுவையும் தவிர்க்க முடியாமலிருக்கின்றது. இதை முதன் முதலாக உணர்ந்தவர்கள் நம்மவர்களே.

பூமியில் உள்ள சகல உயிர்களிலும் சூரியன் சந்திரன் ஆதிக்கம் செலுத்துவதினால் இராகு கேதுவும் உயிரினங்கள்மீதும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன. எனவே நிழல் நிஜமாகிறது. கீழைத்தேசத்தில் சோதிடம், எண் எழுத்துக்கலை யாவும் எப்போதோ தோன்றிவிட்டன. அதன் தோற்றத்தை எவரும் வரையிட்டுக் கூற முடியவில்லை. சூரியனும் சந்திரனும் எவ்வளவு தூரம் பலன் கூறுவதில் முக்கியத்துவம் வகித்தனவோ அவ்வளவு தூரம் இராகுவும் கேதுவும் முக்கியத்துவம் வகித்தன.

இராகு கேது முதலியன சாயா கிரகங்களாயிருந்தபடியால் அவைகளின் தாக்கத்தையும் விளைவுகளையும் நம்ப மறுத்து மேலை நாட்டோர் ஏழு கிரகங்களையும் மட்டுமே கையாண்டார்கள்

நம்மவர்களின் பலன் - ஆராய்ச்சியில் சூரியன் இராகு முதலியோரின் சிற்சில ஒருமைப்பாட்டையும், சந்திரனுக்கும் கேதுவுக்கும் இடையில் காணப்பட்ட சில ஒருமைப்பாட்டையும் மேலை நாட்டோர் ஏதோ அரைகுறையாக விளங்கிக் கொண்டார்கள்.

நம் முன்னோர்கள் சூரியனுக்கும் இராகுவுக்கும் முறையே 1 ஐயும் 4 ஐயும் கொடுத்த படியால் அவர்களும் சூரியனுக்கு எண்கள் 1-உம் 4-உம் கொடுத்தார்கள்.

இதேபோல் எமது முன்னோர்கள் சந்திரனுக்கும் கேதுவுக்கும் முறையே எண்கள் 2, 7 என்பனவற்றைக் கொடுத்தார்கள். இதைக் கண்ட மேலை நாட்டவர்கள் சந்திரனுக்கு எண்கள் 2ஐயும் 7ஐயும் கொடுத்தார்கள்.

நம் முன்னோர்களுக்கு மட்டுமல்ல; அவர்களுக்கும் நன்கு தெரிந்த விடயம். எது? இராகு கேது யாவும் நிழல்கள் என்று,

கிரகங்களை மதித்து. அவைகளின் தாக்கங்களைக் கொண்டு மதிப்பு எண் கொடுக்கும்போது வெறும் நிழல்களுக்கும் மதிப்பெண்கள் கொடுக்கிறார்களே என ஏளனமாக இருந்துவிட்டார்கள் மேலைநாட்டார். காலங்கள் உருண்டோடின. கீழை நாட்டார்கள் ஒன்பது எண்களுக்கும் ஒவ்வொரு கிரகங்களையும் நிழல்களையும் போட்டு வகுத்துவிட்டார்கள்.

அப்போது யுறேனசும நெப்ரியூனும் கண்டு பிடிக்கப்படவில்லை. எனவே தெரிந்த ஏழு கிரகங்களுக்கும் நம்மவர்களைப்போல் ஒவ்வொரு எண்களையும் அளித்தபின் எண்கள் 4-உம் 7-உம் மிஞ்சின. கீழைத்தேசத்தவர்களின் வாதங்களையும் விளக்கங்களையும் ஏதோ அரைகுறையாக விளங்கியபடியால் சூரியனுக்கு எண் 4 ஐயும், சந்திரனுக்கு எண் 7 ஐயும் மேலதிகமாக இருப்பில் வைத்திருக்கும்படி கொடுத்து விட்டார்கள்.

சமீபத்தில் யுறேனசும் நெப்ரியூனும் கண்டு பிடித்தபின் மேலதிகமாக இருந்த எண்கள் 4,7 ஐ முறையே இவர்களுக்கு கொடுத்தார்கள்.

*1930-ம் ஆண்டு புளூட்டோ என்னும் கிரகத்தை கண்டு பிடித்தார்கள்* எண் 1 இலிருந்து 9 வரைக்குள் எண்கள் எதுவும் கிடைக்கவில்லை. அதனுல் பூச்சியத்தை அதற்கு வகுத்தார்கள்.

நம் முன்னோர்கள் ஏழு கிரகங்களுக்கும் இராகு கேதுவுக்கும் தகுந்த மதிப்பளித்து சமய ஆசாரங்களிலும் தகுந்த இடம் கொடுத்தார்கள். இதனுல் தான் அன்று தொடக்கம் இன்றுவரை ஒன்பது கிரகங்களுக்கும் (கிரகங்களுக்குரிய சக்தி சாயா கிரகங்களுக்கும் இருப்பதாகக் கருதிய படியால் ஒன்பது கிரகங்களாகக் கருத்தில் கொண்டார்கள்.) 'நவக்கிரக வழிபாடு' தொடர்ந்து விடுகிறது. அதனுல் முதன் முதலில் கிரகங்களுக்கும் நிழல்களுக்கும் ஆலயங்களில் சிலை வைத்து வழிபாடு செய்தவர்கள் நம் முன்னோர்களாகும். ஆகவே நிழல் நிஜமாவதை முதன் முதலாக உணர்ந்தவர்களும் புரிந்தவர்களும் நம் முன்னோர்களே!

## இலங்கை சோதிட ஆய்வு மன்றக் கூட்டம்

இலங்கைச் சோதிட ஆய்வு மன்றத்தின் சித்திரை மாதக் கூட்டம் 9-5-82 இல் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நல்லூரில் நடைபெற்றது. மட்டக்களப்பு சோதிட கலாமன்ற உறுப்பினரான திரு. எம். பேரானந்தம் எண் சோதிடத்தில் தான் செய்த ஆய்வு பற்றி ஒரு கட்டுரை வாசித்தார். அதில் திரு. மு. மார்க்கண்டுவும், திரு. கே. என். நவரத்தினமும் கலந்துரையாடலில் முக்கியமாகப் பங்கு பற்றினுர்கள்.

அதன் பின்பு வருகிற வருடம் வரும் சிவராத்திரி பற்றி வாக்கிய பஞ்சாங்கம் ஒரு விதமாகவும், திருக்கணித பஞ்சாங்கம் வேறு விதமாகவும் கொண்டாடும் திகதிகளைக் குறிப்பிட்டிருப்பதால் பொதுஜனம் பேதநிலையிலிருப்பதால் இதை தீர்மானிக்கும் பொருட்டு நல்லை ஆதீனகர்த்தா ஓர் சபையைக் கூட்டி அதில் பல அறிவாளிகளின் கருத்தையும் கேட்டு ஓர் முடிபுக்கு வந்து அந்த முடிவை பொது மக்களுக்கு சீக்கிரம் அறிவிக்க வேண்டும் என்று திரு. ந. கந்தசாமி ஐயர் கொண்டுவந்த தீர்மானம் வாசிக்கப்பட்டு இணைக் காரியதரிசியால் அங்கீகரிக்கப்பட்டு ஏகமனதாக சபையார் ஏற்று ஆதீனத் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

இதர விடயங்களில் திரு. மு. வைத்திலிங்கம் பங்குனி உத்தரம் இரு பஞ்சாங்கங்களிலும் வேறு வேறு நாட்களில் அனுட்டிக்கப் போடப்பட்டிருப்பதை வியாக்கியானம் செய்தார். இதற்கு திரு. சி. சிதம்பரநாதக் குருக்கள் சரியான விடையளித்தார். திரு. மு. வைத்திலிங்கம் அதை ஏற்றுக் கொண்டார்.

பின்பு சோதிட சமாசம் பற்றி தலைவர் உரையாற்றினுர். அதற்கு இப்போது காலம் முற்றவில்லை என்றும், சோதிட மன்றம் அங்கத்துவத்தால் பெலன் பெற்று அரசாங்கத்தில் பதிவு செய்தபின் அதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் முற்றுக்கு வந்தனர்.

# ஆய்வு மன்றம்

மு. இராசரத்தினம்,
91/1 மேபீல்ட் லேன், கொழும்பு - 13.

பத்தாதிபன் நவாம்சத்தில் நீசமாகப் பெல மிழந்திருப்பதால் தொழிலில் தடைகள் ஏற்பட்டாலும் மிகுவிரைவில் தொழில் கிடைக்கும். குருதசை சூரிய புத்தி முதல் உங்களுக்குச் சிறப்பான வாழ்க்கை அமையலாம்.

கு. தில்லைநாதன், 5-ம் வட்டாரம், திரியாய்.

விவசாயம், மருத்துவம், இன்சூரன்ஸ் ஏஜென்ஸி கூட்டுறவு, இயந்திரங்கள், தரும—ஆன்மீக—நீதித்துறை, ஆசிரியத்துறை, முதலியன வற்றுடன் சம்பந்தப் பட்ட ஏதாவதொரு தொழில் துறையில் முயற்சி செய்யின் உமக்கு வெற்றி நிச்சயமாகும். நிகழும் குரு தசையில் வேலை பெறுவீர்.

கந்தையா செல்வரத்தினம்,
''கோணேச கிரி'' கைதடி வடக்கு,

உங்களுக்கு ஏழரைச் சனீஸ்வரனின் கோசர காலம் நிகழ்கிறது. அதனாலும் தொழில் தடை தாமதங்கள் ஏற்படுகின்றன. நீங்கள் பூசிக்கும் தெய்வங்களின் ஆசியும் அருளும் உங்களை நல் வழிப்படுத்தும். ஏழரைகழிய நல்ல எதிர்காலம் வருகிறது. அவசரப்படவேண்டாம்.

திருமதி ப. தேவி,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

ஆண்/பெண்ணாக இருபால் குழந்தைகளும் பெறக்கூடிய காரணிகள் இருக்கின்றன. எனினும் பெண்குழந்தைக்கே கூடியஇடமுண்டு.

மா. கலாநாயகி, மண்டூர், தம்பலவத்தை.

உமது முயற்சியும் இருக்குமானால் கல்வியிலும் முன்னேறி, பொறுப்பு வாய்ந்த பெரிய பதவிகளிலும் அமருவதற்குச் சாதகமானது உமது சாதகம்.

செல்வி ஜெயமலர் கந்தையா,
கிளாலி, எழுதுமட்டுவாள்.

உமக்கு ஆசிரியத் தொழில் பொருத்தமானதே. உழைப்பால் உயருவீர், விவசாயமும் நல்ல பலன் தரும். ஏழரைச்சனீஸ்வரனின் கோசாரகாலம் நிகழ்கிறது. அதனால் சில தடைதாமதங்கள் ஏற்பட்டாலும் வெகுவிரைவில் நல்ல எதிர்காலம் வருகிறது.

S. தருமலிங்கம், 15/118 கிராமம், நாவிதன்வெளி.

உறவினர் முதலியவர்களினாலும் ஏற்படுத்தப்படும் தடைகளைச் சமாளித்து முழுமுயற்சியாக—''கருமமேகண்ணாக'' - கல்வியைத் தொடருவீராயின் நிச்சயம் முன்னேறுவது திண்ணமே! சந்தேகம் வேண்டாம்.

மா. குணேஸ், வடலியடைப்பு.

சுபகிருது ஆ பங்குனி மாதம் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமையாகும். நீங்கள் குறிப்பிட்டவாறு வெள்ளிக்கிழமையல்ல. விண்ணப்பப்படிவம் சரியாக இருந்தால்தானே எமது பதிலும் சரியாக இருக்கும்.

கே. அரியநாயகம், இறக்கம், செம்பியன்பற்று.

''சந்திரன் இலக்கின கேந்திரத்தில் இருப்பின் சகடயோக பங்க இராசயோகமாகும்'' என்ற விதிப்படி சகடயோகபங்கமடைந்துள்ளது. இப்படியே நீங்கள் குறிப்பிட்ட அவயோகங்கள் எல்லாம் ஆராய இப்பகுதியில் இடமில்லை. சந்தேகம் தீர - கணித சோதிடரிடம் நேரில் சந்தித்து கேட்குமாறு உங்களுக்கு ஆலோசனை கூறுகின்றோம்.

ஸ்ரீ. கலைவாணன்,
18, M.C.குவாட்டஸ் அமிர்தகழி, மட்டக்களப்பு.

விரைவில் எல்லாக் கஷ்டங்களும் நீங்கிச் சுகம் பெறுவீர், நிழற்படம் சம்பந்தப்பட்ட தொழில்துறை உங்களுக்கு அதிகம் பலன் தரும். அத்துடன் இயந்திரங்கள், அலங்காரக்கலைகள், சம்பந்தப்பட்ட தொழிற்துறைகளானாலும் நன்மையே தரும். இராகுதசை புதன் புக்தியில் விவாகப்பேச்சு முதலியவற்றிற்குச் சாதகமான காலம்.

மீன்பாடும் தேன் நாடாம்

# மட்டு நகர் சோதிட மகாநாட்டில்

## - ஒரு கண்ணோட்டம் -

அருள்வேலழகன்

(சென்ற இதழ் தொடர்)

9-4-82 வெள்ளிக்கிழமை பராசரர் அரங்கில் திரு. வி. சித்திவிநாயகம் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து மாமுனை வடக்கு உபமாகாண அதிபர் பிரம்மஸ்ரீ வி. சாம்பசிவ ஐயர் அவர்கள் ஆசியுரை வழங்கினர்,

''சோதிடம் வேதாங்கங்களில் ஒன்று. வேத புருஷனின் ''கண்'' எனப்படும் சோதிடக் கலையானது சுத்தமாகக் கணிக்கப்படுவதோடு தெய்வ சிந்தனையுடன் அணுகவேண்டும். நடந்து செல்லும் ஒருவனுக்கு கண்பார்வை எவ்வளவு முக்கியமோ அதேபோல் வாழ்க்கைப் பாதையில் செல்வதற்கு சோதிடம் கண்ணாக அமைகிறது. பின்னுக்கு வரப்போகும் நன்மை தீமைகளை முன் கூட்டியே அறிவதற்கு சோதிடக்கலை மிகவும் இன்றியமையாதது. சோதிடப் பலன்களை ஆராய்ந்து கூறுவதற்கு தெய்வானுக்கிரகம் இருந்தால்தான் அவை முழுப் பலனையும் தரும். இலங்கையில் முதன்முதலாக நடைபெறும் இம் மகாநாடு சிறந்து விளங்க எனது மனப்பூர்வமான ஆசியைக் கூறுகின்றேன்,'' என்று குறிப்பிட்டார்கள்.

அதனையடுத்து தலைவர் சோதிடர் திரு. எஸ். மார்க்கண்டு அவர்கள் தலைமையுரை ஆற்றினர்கள்.

சோதிடம் என்பது மனித இனத்தின் மண்ணுலக வாழ்விற்கு ஆதாரமாக வருடம், அயனம், இருது, மாதம், தேதி, வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் முதலான காலங்களைக் காட்டிக் கொடுக்கும் கணிதப் பகுதியாகவும்; அவ்வக் காலங்களிற் தோன்றியுள்ள மனித சாதியினரின் சற்குணம், நற்குணம், ஆயுள், ஆஸ்தி, வாக்கு, மனம், இன்ப துன்பம், முயற்சி, இலாபம் போன்ற மனித சீவியகால நிலை இத்தன்மையினதென்று அளந்து காட்டும் கருவியானது தான் சோதிடத்தில் சாதகப் பகுதியாகவும் அமைந்துள்ளது. இன்னும் பல்வேறு பகுதிகளாகவும் சோதிடம் விரியும்.

ஒருவர் மண்ணில் பிறக்கும்போது பன்னிரண்டு இராசிகளில் நிற்கும் கோள்களின் நிலைகளே, பிறந்தவர் என்னென்ன கலைகளில், எந்தெந்தத் துறைகளில் பாண்டித்தியம் எய்துவார். அந்தச் சாதகருக்கு என்ன விதமான தொழில்தான் கைகூடும். என்ன கிரகத்தின் மகா தெசாபுத்தியில் என்னென்ன விதமான சம்பவம் நிகழும். இவற்றையெல்லாம் படம் பிடித்துக் காட்டுவது சோதிடக்கலை. அது மட்டுமல்ல இச் சோதிடக் கலை ஒரு சாதகரின் பிற்காலத்தில் நிகழப் போவதை, பிராரத்துவ, கன்ம நிகழ்வுகளை முன்னறிவிப்புக் கொடுத்து, உஷார் கொடுக்கச் செய்யும் ஒரு கருவி. ஆனால் இச் சோதிடக் கலைக்கு சோதிடன் எவ்வளவு தூரம் அவன் தனது நுண்ணிய மூளையைப் பயன்படுத்தி நுணுக்கமாகக் கணித சுத்தியுடன் கணிக்கிறானோ அதற்குத் தக்கவாறே அதன் பலன்களும், நிகழ்வுகளும் அமைய முடியும். கணிதத்தைக் கொண்டு

கணிக்கும் கணிப்பில் சிறு தவறு ஏற்பட்டாலும் கூட, சோதிடக் கலையின் நிகழ்வுகளும், விளைவு களும் எதிர்பார்ப்புக்கு மாறுகவே அமையும்.

கடலில் செல்லும் கப்பலில், கடலில் ஏற் படக்கூடிய அபாயங்களை தடுத்து, கப்பலைக் கரை சேர்ப்பதற்காக பலவகையான முன்னறி வித்தல் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கும். அவை யாவன: திசையறிகருவி, மழைமானி, வாயுமானி என்பனவைகளாகும். இக் கருவிகள் சமுத்திரத் தில் சம்பவிக்கவிருக்கும் பெருமழை, புயல் போன்ற ஆபத்துக்களை முன்னுடியே அறிவித்துக் கொண்டிருக்கும். ஆனல் அந்த அறிவித்தல்களின் பெறுபேறுகளை கப்பல் அதிகாரிகள் சரிவரக் கணித்து சரியான காலத்தை ஐயந்திரிபுறக் கணக் கிட்டுக் கொள்ளாது தவருகக் கணிக்கப்பட்டிருப் பின், கணிப்புத் தவறு காரணமாக அதன் நிகழ் வுகள் எதிர்பார்த்த காலத்திற்கு முன்பும் நிகழ்ந்து விடலாம். சிலசமயம் பின்பும் நிகழ்ந்து விடலாம். இதனல் கப்பலுக்கு ஆபத்து ஏற்படத்தான் செய் யும். அவர்களின் கணிப்பு கடுகளவேனும் தவரு திருந்தால் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட ஆபத்துக்களைத் தடுக்கத்தக்க வகயில் நடந்து கொள்ள முடியும்.

இதே போன்றதுதான் மனித வாழ்க்கையில் சோதிடக் கலையும். மனிதனின் ஆயுட்கால சக்க ரத்தில் நிகழப் போகும் சுக, துக்கங்களை, உயர்வு தாழ்வுகளை எமக்கு முன்கூட்டியே எடுத்துக் காட் டுகின்றன. அவற்றிற்கு பஞ்சாங்கங்களும் பக்க துணையாக அமைகின்றன. சோதிடக்கலையின் முக் கிய அம்சங்களில் ஒன்று பஞ்சாங்கம். அந்தப் பஞ்சாங்கம் கணிக்கப்படுவதில் அதி விழிப்பும், கணித சுத்தியும் வேண்டும். சோதிடக்கலையின் உயிர் நாடியான பஞ்சாங்கத்தின் கணிதமுறை கணித சுத்தியினின்று தவறுமேயாகில் சோதிடக் கலையின் நிலை ஒருபோதும் வளரவும் முடியாது, சோதிடக் கலையால் மக்கள் பயனடையவும் முடி யாது.

சோதிடத்தில் ஓரளவு அறிவு மக்களுக்கு இருக்கவேண்டும். எல்லாத் தேவைகளுக்கும் சோதி டரை அணுகிக்கொண்டு இருக்கமுடியாது. ராகு காலம், சுபநேரம், முகூர்த்தம் இவைகளை ஓரள வாவது உணர்ந்து கொள்வதற்கு சோதிட அறிவு முக்கியம். தங்களுடைய நட்சத்திரம், இராசி, அட்டமத்துச்சனி, ஏழ்ரைச்சனி போன்ற இவற் றையாவது மக்கள் தாமே உணர்ந்துகொள்ள வேண்டும். (தொடரும்)

## "கூறும் அடியார்கள் வினை"

"அகளங்கன்"

திருப்புகழிலே அருணகிரியார் "ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே..." எனத் தொடங் கும் ஒரு பாடல் பாடுகிறுர். இங்கே வரும் ஒரு வரிதான் 'கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே" என்பது. இதற்கு அடியார்கள் கூறும் துன்பங்களைப் போக்கும் முகம் ஒன்று என்றே பொருள் கொள்ளப்பட்டு வருகிறது.

உண்மையில் இதன் பொருள் வேறு விதமா கவே இருக்க வேண்டும் என்று எனக்குப் படுகிறது.

"அடியார்கள் என்று கூறப்படுபவர்களின் வினைகளைத் தீர்க்கும் முகம் ஒன்று என்பதே சரியான பொருளாக இருக்க வேண்டும். இங்கே 'வினை' என்ற சொல்லும் நான் கூறிய கருத்துக்கே வலு வூட்டுகிறது. அடியார்கள் கூறும் வினையை என்று வரமுடியாது. எனவே அடியவர்கள் என்று அழைக் கப்படுபவர்களின் பாப வினைகளைத் தீர்க்கும் முகம் என்பதே சரியானது.

உண்மையான அடியவர்கள் தமது குறைகளை ஆண்டவனிடம் தெரிவிப்பதே இல்லை. இதனைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் அழகாக கூறுகி ருர். திருக்கூட்டச் சிறப்பைப் பற்றிக் கூறும்போது

"கேடும் ஆக்கமுங் கெட்ட திருவினுர்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினுர்"

எனக் கூறுகிறுர். இங்கே அடியவர்கள் இறை வன்மேல் ஏற்படும் அன்பினலே தம்மை மறந்து கும்பிடுவதேயன்றி வீட்டு இன்பம் எனப்படும் முத்தி இன்பத்தைக்கூட இறைவனிடம் வேண்டுவ தில்லையாம்.

எனவே "கூறும் அடியார்கள் வினை" என்பது "அடியார்கள் கூறும் வினை" என்று இல்லாமல் "அடியவர்கள் என்று கூறப்படுபவர்களின் வினை" என்று பொருள் கொள்வதே அடியவர்களுக்கும் ஆண்டவனுக்கும் ஏற்றதான சிறப்பைச் செய்வ தாக இருக்கும் என்று கருதுகிறேன்.

# சந்தேக நிவிர்த்தி

''மகம்''

K. S. காளிமுத்து,
அல்மா குருப்பு, கந்தப்பாலே, நுவரெலியா.

சந்: நான் 1951-11-25 ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்குப் பிறந்தேன். எனது ஜாதகக் குறிப்பில் துலாலக்கினம் என்று குறித்திருக்கிறுர் ஒரு சோதிடர். இதில் சந்தேகமாக இருக்கிறது. நிவிர்த்தி செய்வீர்களா?

நிவி: உங்கள் விபரங்களின்படி உதயலக்னம் துலாம் என்பது பிழை. சரியான உதயலக்னம் ''மிதுனம்''.

இ. ரஜினி, இணுவில்.

சந்: நான் 19-6-61 (ஆங்கிலத்திகதி) இரவு 12-33க்கு மூளாய் ஆஸ்பத்திரியில் பிறந்தேன். எனது நட்சத்திரம், ராசி, கிரகநிலே முதலிய வற்றை அறியத்தரவும்.

நிவி: இரவு 12 மணிக்குப் பின் ஆங்கிலத் தேதியை மறுநாளாகக் கொள்ள வேண்டும். உங்கள் பிறந்தநேரத்தை 20-6-1961 0-33 A.M. எனக் குறிக்கவேண்டும். உதயலக்னம் - மீனம், சந்திரலக்னம் - சிங்கம், நட்சத்திரம் - பூரம், 5-ல் குஜன், 6-ல் சந்திரன் – ராகு, 11-ல் குரு - சனி 12-ல் கேது.

வே. தெய்வநாயகம்,
8-வட்டாரம், துறைநீலாவணே கல்முனே.

சந்: வடஅட்சம் 6-56 பாகையிலுள்ள கொழும்புக்குசூரிய உதயம் பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 7-25 பாகையிலுள்ள கல்முனேக்கு எவ்வாறு காண்பது? கொழும்புக்குள்ளதை உபயோகிக்கலாமா?

நிவி: சூரியஉதயம் அட்சரீதியாகவே கொடுக்கப்பட்டுள்ளதால் ஒரே அட்சத்திலுள்ள எல்லா இடங்களுக்கும் பொருந்தும். உதாரணமாக 7-ம் அட்சத்துக்குக் கொடுக்கப்பட்ட சூரிய உதயத்தை அதே பாகைக் கோட்டின் அண்மையிலுள்ள எல்லா இடங்களுக்கும் கொள்ளலாம்.

சு. மனேகரன், பொன்னுலே தெற்கு, சுழிபுரம்.

சந்: நான் விஜயஞு மாசி மீ 25 ௳ (8-3-54) திங்கட்கிழமை உச்சிநேரத்தில் பிறந்தேன். சூரியன் திரும்பி 3½ அடி நேரத்தில் பிறந்தேன். எனது உதயலக்னம், சந்திரலக்னம் நட்சத்திரம் என்ன?

நிவி: உதயலக்னம் காண கால் அடிக்கு சுத்தமான நேரம் கணிக்கவேண்டும். திருக்கணித நிலேயத்தாருடன் தொடர்புகொண்டு கால் அடிக்கு சுத்தமான நேரம் கணிப்பிக்கவும். நட்சத்திரம் அசுவினி, சந்திரராசி மேடம்.

செல்வி க. நேசராணி,
தோலகட்டி ஒழுங்கை, வசாவிளான்.

சந்: 25-1-1959 முற்பகல் 10 மணி 10 நிமிஷத்தில் பிறந்த எனது இலக்கினம், ராசி, கிரகநிலே களேத் தரவும். யூரனஸ், நெப்டியூன், புளுட்டோ ஆகிய கிரகங்களின் இருப்பிடத்தையும் தெரிவிக்கவும்.

நிவி: உதயலக்னம் - மீனம், சந்திரலக்னம் - கடகம், கிரகநிலே வருமாறு: இலக்கினத்தில் கேது, 3ல் குஜன், 5ல் சந்திரன் - யுரேனஸ், 6ல் புளுட்டோ, 7ல் ராகு, 8ல் நெப்டியூன், 9ல் குரு, 10 புதன் - சனி, 11ல் சூரியன் - சுக்கிரன்.

A. புஷ்பம், சரவணே மேற்கு, வேலணே.

சந்: எனது பிறந்த திகதி 21-4-1959. எனது பெயர் *A. Puspam* என எழுதிவருகின்றேன். *A. Pushpam* என வழங்கிவந்தால் அதிஷ்டம் ஏற்படுமா?

நிவி: உங்கள் பிறப்பெண் 3, கூட்டெண் 4, ஆகவே பெயரெண் 1 அல்லது 9ல் அமைவது நன்று. *A. Pushpam* – 36 = 9 என வழங்கி வரவும். நன்மை உண்டு.

க. குருநாதன், ஸ்ரேசன் ரேட், உரும்பிராய்.

சந்: கேகாலேயில் 5-6-1975 காலே 9-50 மணிக்கு ஜனனமான ஒருவரின் லக்னம் ராசி நட்சத்திரம் ஆகியனவற்றை தந்துதவவும்.

நிவி: உதயலக்னம் - கடகம், நட்சத்திரம் - ரேவதி இராசி - மீனம்.

வ. விசுவநாதன், கருகம்பனை.

சந்: மார்கழி 1-ம் தேதி மழைபெய்தால் பின்பு மழை பெய்யாதென்றும், கன்னிச் செவ்வாய்க்கு கடல் வற்றிப்போனாலும் மழை இல்லையென்றும் கூறப்படுகிறது. எனவே இவ்வருடம் மழை எப்படியிருக்கும்?

நிவி. இவ்வருடம் மழைக்கிரகம் சுக்கிரன் சூரிய பகவானுக்குப் பின்னே சென்றுகொண்டிருக்கிறது; கார்த்திகை மாதத்தின் மேல் தான் முன் செல்லுகிறது. ஆகவே இவ்வருடம் முன்மழை குறைவும், பின்மழை அதிகமும் இருக்கும்.

செல்வி மா. ஞானம், செல்வாநகர், வவுனியா.

சந்: நான் 1955-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ந் திகதி பிறந்தேன். நேரம் தெரியாது. கிழமை திங்கள். எனது நட்சத்திரம், இராசி, லக்னம் என்பவற்றை அறிய முடியாதுள்ளது. இச் சந்தேகத்தை நீக்க முடியுமா?

நிவி; பிறந்த நேரம் தெரியாமல் உதயலக்னம் முதலியன காண முடியாது. சரியானநேரம் தெரியாவிட்டாலும் ஏறக்குறைய நேரம் தெரியக்கூடியதாக இருந்தால் தான் இவற்றைக் குறிப்பிட முடியும்.

ப. பத்மசீலன், தென்மட்டுவில், சாவகச்சேரி.

சந்: நான் அறிவுச் சுரங்கம் 11ல் தரப்பட்ட வினாக்களுக்கு சரியான விடை எழுதி பரிசுக்காகக் காத்திருந்தேன். இறுதியில் தோல்வியாகவே முடிந்தது. சீட்டிழுப்பு எப்படி நடைபெறுகிறது? விளக்கவும்.

நிவி: போட்டி வினாக்களுக்கு சரியான விடை நீங்கள் மாத்திரமல்ல பல அன்பர்கள் எழுதியுள்ளார்கள். பலர் சரியான விடை எழுதுமிடத்து எல்லோரும் பரிசுக்குரியவர்களாகமாட்டார்கள். அவை அதிஷ்டம் பார்க்கப்பட்டு ஒருவரே பரிசுக்குரியவராவர்.

டாக்டர் சி. சுந்தரலிங்கம்,
பருத்தித்துறை வீதி, மயிலிட்டி.

சந்: திருக்கணித பஞ்சாங்கத்தில் கிரக நிரயன ஸ்புடங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றது. இலங்கை நேரம் 5-30 நிலையாக இருக்க அயனும்சம் மாறுவதையொட்டி? S. T. பகல் 12 மணிக்கு தினமும் ம. நி. செ. மாறுவதெப்படி? விளக்கவும்.

நிவி: கிரக நிரயனஸ்புடங்கள் தினந்தோறும் கிரகங்களின் அசைவுக்கேற்ப மாறுபட்டுக் கொண்டேயிருக்கும். தினந்தோறும் இலங்கை நேரப்படி காலை 5-30 க்குரிய ஸ்புடங்களே கொடுக்கப்பட்டுள்ளன. அதாவது இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு ஒரு குழந்தை பிறந்தால் அத்தினத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள கிரக ஸ்புடங்களை அப்படியே எடுத்துக்கொள்ளலாம். ஏனைய நேரங்களுக்கு கிரகஸ்புடத்தின் கதிக்கேற்ப வீதப்படுத்திக்கொள்ளவேண்டும். அயனும்சம் வருஷ வீதம் 50 விகலை வரையில் அதிகரிப்பதால் மாதாமாதம் விகலைக்கணக்கில் சிறுமாற்றம் ஏற்படும். S.T. தினமொன்றுக்கு 3 நிமிஷம் 56 செக்கன் வரையில் வேகம் கூடுதலாக இருக்கும்.

E. K. குலசிங்கம், வெள்ளவத்தை.

சந்: சோதிடமலரில் மாதாந்தம் வெளியிடப்படும் யாழ்ப்பாண உதயலக்னம் காணும் பதகத்துக்கும், திருக்கணித பஞ்சாங்கத்தில் தெரிவிக்கப்பட்ட பிரகாரம் உதயலக்ன இருப்பிலிருந்தும் இலக்கினம் கணிக்கும் போதும் சில வேளைகளில் 2-3 நிமிஷமளவில் வித்தியாசம் ஏற்படுகிறது. இதில் எது சரி? பஞ்சாங்கத்தில் சில மாதங்களில் யாழ்ப்பாண உதயலக்ன ஆரம்பநாடி விநாடி யாழ்ப்பாண இராசிமானத்திலுள்ள நாடி விநாடியிலும் அதிகமாக இருப்பதன் காரணம் யாது?

நிவி: உதயலக்ன பதகம் பரவலாகக் கணிக்கும் போது சூரிய உதயத்தைக் கொள்ளும் விதத்திலோ உதயாற்பரத்தையும் சூரிய உதயத்தையும் சேர்த்துக் கணக்கிடும் வகையிலோ சில சமயங்களில் வித்தியாசம் ஏற்படலாம். பிறந்த நேரம் இலக்கின சந்திகளில் வருமேயானல் பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டபடி கணித்து உதய லக்னம் காண்பதே சுத்தமானது.

சூரியனுடைய ராசிப்பிரவேசங்களை ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குவைத்தே இராசிப்பிரமாணம் அமைக்கப்பட்டது' ரவிப்பிரவேசம் மாறுபடும் போது உதயலக்னம் நாடிவிநாடிகளில் சொற்ப வித்தியாசம் ஏற்படலாம்.

---

சந்தேகங்களை கேட்பவர்கள் போஸ்க் காட்டில் மட்டும் சொந்த விலாசத்துடன் எழுதிக் குறிப்பிட்ட விலாசத்தை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும். ஒரு போஸ்ட்காட்டில் ஒரு கேள்வி மட்டும் கேட்கலாம்.

''சந்தேக நிவிர்த்தி'' சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

---

# வாசகர் எண்ணம்

கௌரவ ஆசிரியர் அவர்கட்கு!

தங்களின் புனிதமான ''சோதிடமலரில்'' மாதாந்தம் வெளிவரும் ஒவ்வொரு விடயமும் என்போன்ற சோதிட மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் உகந்ததாக இருப்பது கண்டு பெரு மகிழ்ச்சி. இதனையிட்டு சோதிட உலகுக்கு நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன். ஆயினும், தங்கள் மலரில் வெளிவந்த ''கல்யாணப் பொருத்தங்கள்'' என்ற கட்டுரையைப் பற்றியும், அதனை எழுதிய பொ. சங்கரப்பிள்ளை அவர்களைப்பற்றியும் சிறிது கூற முற்பட்டுள்ளேன்.

அவர் பொருளாதார ரீதியிலோ அல்லது வியாபார, கல்வித்துறை ரீதியிலோ பெரும் பட்டதாரியாக இருக்கலாம். ஆனால் சோதிடத்தில் அவற்றைப் புகுத்தவேண்டிய அவசியமில்லை. கல்யாணப் பொருத்தங்களில் உள்ள அனேகமான விடயங்களை ''சோதிடரின் சோடிப்பு, பித்தலாட்டம், மந்திரத்தால் மாங்காய் உண்டுபண்ணல்'' போன்ற அவரின் ஏகமனதான முடிபுகளைக் கொண்டு சோதிடத்தைப் பாரதூரமாகத் தாக்குகிறார்.

திருக்கணிதமா, வாக்கிய பஞ்சாங்கமா சிறப்பு எது என்று சிந்திக்கத் தூண்டும் நீங்கள் இப்படிப்பட்டவர்களின் விடயங்களுக்கு உங்கள் சோதிடமலரில் இடம்கொடுப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். சோதிட உலகுக்கே உலை வைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. எனினும் சோதிடமலர் இவ்வாறான விடயங்களுக்கு இனிமேல் இடங்கொடுக்காது என்று பூரணமாக நம்புகின்றேன்.

ஓமந்தை, வாசகன்
வவுனியா. க. குமாரகுலசிங்கம்

சோதிடமலர் ஆசிரியருக்கு!

தங்கள் மலரின் ஐந்தாவதாண்டுச் சிறப்பு மலரை மிக விருப்போடு நுகர்ந்தோம். இலங்கையில் வெளிவரும் ஒரேயொரு சோதிட மாத சஞ்சிகை என்ற புகழ்மிக்க ''சோதிடமலர்'' ஆரம்பித்து ஐந்தாண்டுகள் ஆகிவிட்டன என்றால் அந்தப்பெருமிதம் வாசகர்களாகிய எங்களுக்கு உண்மையில் மனமகிழ்ச்சியைத்தரும் செய்தியாகும். கடந்த நான்காண்டுகளில் பல்வேறு கோணங்களில் பலவிதமான சோதிடக்கட்டுரைகளும், சமயசம்பந்தமான பல கருத்துக்களும் வெளிவந்தமை இன்றுகூட எம் மனதில் நிழலாடுகின்றது. இந்தியாவில்தான் இப்படிச் சஞ்சிகைகளை வெளிவரச் செய்யமுடியும் என்ற கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து இலங்கையிலும் இப்படியொரு சஞ்சிகையை வெளியிடமுடியும் என்ற நோக்குடன் செயற்பட்டுவரும் 'திருக்கணி நிலைய'த்தினரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

ஐந்தாவதாண்டு மலரில் 'பிறநாட்டுப் பிரயாணம்' பற்றி ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது. பலரும் வாசித்து விளங்கத்தக்க வகையில், தமது பலன்களை தாமே பார்க்கக் கூடிய விதத்தில் மிகவும் எளியநடையில் அக்கட்டுரை எழுதப்பட்டிருந்தது கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். இதுபோன்று பல கட்டுரைகளை வருங்காலத்திலும் சோதிடமலர் தாங்கிவரும் என்ற நம்பிக்கை எமக்கு நிறைய உண்டு. மேலும் 'தமிழ் ஈழம் மலருமா' என்ற கட்டுரை மூலம் பல நடைபெற்ற சம்பவங்கள் வெளிவந்துள்ளன. இக்கட்டுரை மூலம் கடந்தகால வரலாறுகளை நாம் தெளிவாக அறிய முடிகிறது. இதற்கெல்லாம் சோதிடமலரின் ஆசிரியர்க்கும், அதனை வெளியிடுவோர்க்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். சோதிடமலரின் சேவை மேலும் பல்லாண்டு வாழ எனது நல்வாழ்த்துக்கள்!

திருகோணமலை வீதி, அன்பு மறவாத வாசகன்
மட்டக்களப்பு. இ. கந்தசாமி.

அன்பின் ஆசிரியருக்கு!

சோதிடமலரை தொடர்ந்து படித்துவரும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். சோதிடமலர் வெறும் சோதிட சஞ்சிகையாக மட்டும் இருக்கவேண்டுமென்பது என்ன நியதியா? இந்துக்களாகிய எமக்கே இன்னும் இந்துமத அனுட்டானங்களின் பொருள் சரியாக விளங்குவதில்லை. அதை நிவிர்த்திக்குமுகமாக சோதிடமலரில் ''இந்துதர்மம்'' என்பதுபோல் ஒரு கட்டுரை பிரசுரித்தாலென்ன?

உலகில் பிரபல்யம்வாய்ந்த தலைவர்கள், நாயன்மார் போன்றோரின் வாழ்க்கைச் சரித்திரத்தை சோதிடரீதியில் ஆராய்வது சிறந்தது. இது வளர்ந்துவரும் என்போன்ற சோதிடர்களுக்கு பயனுடையதாகும். ஏனெனில் எவ்வளவுதான் சோதிடத்தைக் கற்றாலும் அனுபவம் நிறைய தேவைப்படுகிறது. இதன் மூலம் அனுபவத்தைப் பெறமுடியும்.

மேலும் சோதிடபாடம் என்ருெரு தொடர் கட்டுரை வெளியிட்டால் பலருக்கு மிகவும் பயன் தரக்கூடியதாக அமையும். கட்டுரையெழுதும் போது பழமையான கடும் தமிழ்ச் சொற்களைத் தவிர்த்து சாதாரண எளிய நடையைப் பயன் படுத்தவும். ஏனெனில் பண்டிதனுக்கு ஜோதிடம் தேவையில்லை. அவன் கரையேறிவிட்டவன். பாமரனுக்கு விளங்கக்கூடிய வகையில் எளிய தமிழ்ச் சொற்களை பயன்படுத்தினல் உபயோக முள்ளதாக இருக்கும்.

ஆஸ்பத்திரி வீதி, அன்பு வாசகன்
யாழ்ப்பாணம். B. R. கமலநாதன்

கனம், ஆசிரியருக்கு!

துந்துபி வைகாசி சோதிடமலர் கண்டோம். மலரின்விலையை வைகாசி முதல் அதிகரித்துவிட்டீர்கள். விலைவாசி ஏறுவது யாவரும் ஒத்துக் கொள்ளும் ஒரு சர்வரோக சாட்டுதல் காரணி தானே! விலை ஏறும் இதழ்கள் திருப்தியாக இல்லை. பக்கங்களைக் கூட்டலாம். விடயங்களைக் கூட்டலாம். கணக்குப்பண்ணுவது இருவழிப் பாதை யாக அமைவதே விரும்பத்தக்கது.

என்போன்ற ஆரம்ப சோதிடமாணவர்கட்கு ஏதும் ஒருவழி காண்பிக்கலாகாதா? சோதிடபாடம் சோதிடமலர் மூலம் ஆரம்பிக்கலாம். இல்லையேல் தபால்கல்வி மூலம் நடாத்தலாம். ஆரம்பமாணவரை தூண்டக்கூடிய விதத்தில் இவற்றைச் செய்தால் நல்லதுஎன எண்ணுகிறேன்.

எங்கேயும் இலாபம் அவசியம்தான். இதற்கு விளம்பரங்களைத்தேடிப் பிரசுரித்தால் மலரின் விலையை அதிகரிக்கத்தேவையிருக்காது.

பருத்தித்துறை வீதி, அன்பன்
மயிலிட்டி. சி. சுந்தரலிங்கம்

வாசக அன்பர்களுக்கு!

உங்கள் வேண்டுகோளுக்கியைய சோதிடம் கணிக்கும் முறையை அத்திவாரத்துடன் தெளிவாக மிகவிரைவில் தொடர்கட்டுரையாக வெளியிட இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்துசமய விஷயங்களை அவ்வப்போது வெளியிடுகிறோம். இருப்பினும் இன்னும் விசேடமாக வெளியிட முயற்சிக்கிறோம். வாசகர்களின் ஊக்கத்துக்கு எமது நன்றி.

— ஆசிரியர்,

## கடுக்காயின் சிறப்பும் அதன் குணமும்

கடுக்காயின் சிறப்புப் பற்றிக் கூறுமிடத்து பதார்த்த குண சிந்தாமணியின் விளக்கத்தைக் கீழே தரப்படுகிறது. அதாவது:-

கடுக்காயும் தாயும் ஒன்றென ஒருவாறு நினைத்தாலும், தாயைப் பார்க்கிலும் கடுக்காயே சிறந்தது எனலாம். ஏனெனில், தாயானவள் தன் பிள்ளைக்கு அறுசுவை உணவையூட்டி உடலை வளர்ப்பாள். பிணிகளை நீக்கினலல்லவோ உணவு பயன்பட்டு உடல் தேறும், என்னும் வகையறியாமல் உணவை மாத்திரம் ஊட்டுந் தன்மையுடையவளாதலால், அத் தாயினும் கடுக்காய் சிறந்ததெனக் கூறினர். கடுக்காயில் ஏழு வகையுண்டு.

கடுக்காயின் குணத்தைப் பொதுவாகக் கூறுமிடத்து கன்னம், களம், கண், நா, ஆண்குறி இவ்விடத்து ஏற்படும் சகல வியாதிகளையும் நீக்குந் தன்மையுடையது. அதன் தோலைக் கஷாயமிட்டுப் பருகினல் மலச்சிக்கலை நீக்கிவிடும். கடுக்காயை வரிக்காய் என்றும் சொல்வதுண்டு.

இது சாதாரணமாக எல்லா இடங்களிலும் காணப்படுகிறது.

சி. வை. வன்னியநாதன் R.A.M.P.
(சித்த வைத்தியர்)
சரசாலை — சாவகச்சேரி,

## பூரண சந்திர கிரகணம்

6-7-82 செவ்வாய்க் கிழமை பூரண சந்திர கிரகணம். இலங்கை நேரப்படி பகல் 11-03 முதல் பி. ப. 2-59 வரை கிரகணம் நிகழ்வதால் இலங்கை, இந்தியா ஏனைய மத்திய பாகங்களிலும் தோற்றுது. மேற்கே பசுபிக் சமுத்திரம், அமெரிக்கா, ஆபிரிக்காவின் மேற்குப் பகுதி முதலிய இடங்களிலும், கிழக்கே அவுஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதி, பசுபிக் சமுத்திரம் முதலிய இடங்களிலும் தோற்றும்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 2.

### போட்டி நிபந்தனைகள்

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து, உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்.
2. 1-7-1982க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 20/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்ருவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும். சந்தாதாரர்களாயின் பரிசுத்தொகை இருமடங்காகும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 2
சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 சி | 5 | 6 |
| 7 கா | 8 | ■ | 10 | 11 | 12 அ |
| 13 | ■ | 15 | 16 | 17 ர | 18 |
| ■ | 20 | 21 ம் | 22 | 23 | 24 ச |
| 25 | ■ | 27 | 28 ச | 29 | 30 |
| 31 | 32 க் | 33 | 34 | ■ | 36 |

பெயர் ..........................................

விலாசம் ..........................................

..........................................

### இடமிருந்து வலம்

1. செவ்வாய் இங்கு ஆட்சிபெறுகின்ஞர்.
7. உயிரினங்களில் ஒலிச்சத்தியை உணரும் உறுப்பு இது.
10. ''......பூத்தாற்போல'' என்பதை நிரப்புவதனுல் குழம்பியுள்ள இச்சொல் கிடைக்கும்.
15. சிவப்புநிறம் பொருந்திய உலோகம் உருக்குலேந்துள்ளது.
20. எழுத்துக்களே ஒழுங்காக்கின் ''நிகழ்ச்சி''யைக் காணலாம்.
27. தோழன் நிலேதடுமாறி நிற்கிருன்.
31. இப்போட்டியில் பரிசு கிடைக்காவிடினும் இதனே அடையாதீர்கள்.

### மேலிருந்து கீழ்

1. இவ்வருடத்தில் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொலே செய்யப்பட்டார்.
2. பெண்களின் ஓர் பருவமாற்றத்தை இவ்வாறு கூறுவர்.
4. இராசிவர்க்கங்களில் இச்சக்கரம் கல்வியைப் பற்றி அறிதற்குப் பயன்படும்.
5. நவக்கிரகங்களில் நடுநாயகனுக்கு இப்படியும் பெயருண்டு,
6. சாயன கிரகஸ்புடங்களிலிருந்து மாறியுள்ள இதனைக் கழிக்க நிரயன கிரகஸ்புடம் கிடைக்கும்.
15. குழம்பியிருக்கும் இது சைவாகமங்களில் ஒன்று.
25. இவரது தசா காலம் 7 வருடங்களாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 1 இன் விடைகள்

இடமிருந்து வலம்

1, குங்குமம் 9. கங்காரு 13. பசு 16. பாரதி 19. மகரமாதம் 26. அருந்ததி 31. தரிசம்.

மேலிருந்து கீழ்

1. குங்குமம் 3. குரு 4. மகாபாரதம் 5. அரங்கம் 12. திருமகள் 14. சுந்தரி 21. சமாதி.

பரிசில் பெறுவோர்:

1-ம் பரிசு: ச. வேலுப்பிள்ளே
மீசாலே தெற்கு, மீசாலே.

2-ம் பரிசு: மாலினி அழகரத்தினம்
15, மூஞமலே வீதி, மானிப்பாய்.

3-ம் பரிசு: த. யோகராசா
வாகையடி ஒழுங்கை,
சரசாலே, சாவ்கச்சேரி.

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.

எண் சோதிட நிபுணர்

## திரு இ. மகாதேவா

அவர்கள் எழுதும்

# 'அதிஷ்ட எண் ஞானம்'

(தொடர் கட்டுரை)

எண்களைப் பற்றி அனுபவ ரீதியில் ஏற்பட்ட தெளிவான கருத்துக்களும், விளக்கமான பலாபலன்களும் நிறைந்துள்ளன.

வாசிக்கத் தவறாதீர்கள்!

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 39-60 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல்வழி) | வருட சந்தா | ,, 70-00 |
| | இந்தியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 96-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 126 00 |
| | இங்கிலாந்து | (விமான வழி) | வருட சந்தா | ,, 150-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. 3-30 அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka. No. Q. B. 59/300/183/82





ஓர் நற்செய்தி

குறைந்த செலவில்
கூடிய பயனை அளிக்கும்
தரமுடையது
மில்க்வைற் நீல சோப்

| | | |
|---|---|---|
| மில்கவைற் | நீல சோப் கட்டி | 1/50 |
| ,, | முழு பார் | 9/50 |
| ,, | அரை பார் | 4/75 |
| ,, | சலவைப் பவுடர் 1அ | 0-75 |
| ,, | சலவைப் பவுடர் 5அ | 3/50 |
| ,, | சலவைப் பவுடர் 1இ | 11/- |

பாவனையாளர் நலன் கருதி வெளியிடும்

மில்க்வைற் தொழிலகம் – யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7233 தந்தி: மில்க்வைற்

இதோ அரிய சந்தர்ப்பம்!

France, Italy நாடுகளுக்கு செல்வதற்கு சகல ஒழுங்குகளும் செய்கிறார்கள்

**IMPERIAL TRAVEL ஸ்தாபனத்தார்**

விசா, விமான ரிக்கற் உட்பட 9100/- மட்டுமே
மற்றும் உலகின் எப்பாகங்களுக்கும் செல்வதற்கு விசா, பாஸ்போட்
விமான ரிக்கட், ரவலர்ஸ் செக் என்பன பெற்றுக்கொள்வதற்கும் நாடுங்கள்

**IMPERIAL TRAVEL – COLOMBO - 11.**

சில ரிக்கற் கட்டணங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| கொழும்பு — திருவனந்தபுரம் ... | 825/- |
| கொழும்பு — திருச்சி ... | 850/- |
| கொழும்பு — மட்ருஸ் ... | 1225/- |
| கொழும்பு — பம்பாய் ... | 2700/- |
| கொழும்பு — சிங்கப்பூர் ... | 3700/- |
| கொழும்பு — சிங்கப்பூர் — கொழும்பு ... | 6400/- |
| கொழும்பு — கோலாலம்பூர் — கொழும்பு ... | 6800/- |
| கொழும்பு — லண்டன் — கொழும்பு ... | 14000/- |
| கொழும்பு — பெல்கிரேட் — கொழும்பு ... | 17200/- |
| கொழும்பு — பராக் ... | 9,000/- |

தொடர்பு கொள்ள வேண்டியது **பாக்கியராஜா**

First Floor 51. First Cross street — COLOMBO-11 தொலைபேசி: 547031


Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280